Registered as a NewsPaper　　பக்கங்கள் –12　　விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

நாதம் 15　　திருவள்ளுவர் ஆண்டு 2035　　ஆனி–16　　30–06–2004　　புதன்கிழமை　　ஓசை –133.




# கருணாகுழுவினர் 7பேர் ஆயுதங்களுடன் மட்டக்களப்பில் புலிகளால் கைது!

## சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினருடன் இணைந்து செயற்படுவதாக விசாரணையில் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**சிறிலங்காப் படைத்தரப்பினருடனும், இராணுவப் புலனாய்வுத் துறையினருடனும் இணைந்து செயற்பட்டு வந்த கருணா குழுவைச் சேர்ந்த ஏழு பேர் ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் என விடுதலைப்புலிகளின் மட்டு- அம்பாறை மாவட்ட ஊடகத்துறையினர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.**

இவ் அறிக்கையின் விபரம் வருமாறு; சிறிலங்காப் படையினருடனும் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப்பிரிவினருடனும் இயங்கி வந்த கருணா குழுவினர் 7பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான திக்கோடை, தும்பங்கேணி பகுதியில் ஒரு குழுவாகவும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதி யான களுவாஞ்சிக்குடி, களுதா வளை, கல்லாறு ஆகிய பகுதிகளில் மற்றொரு குழுவாகவும் இயங்கி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இவர்களிடமிருந்து கைத் துப்பாக்கிகள், எறிகுண்டுகள், தொலைத்தொடர்பு கருவிகள், கையடக்கத் தொலைபேசிகள் விடுதலைப்புலிகளால் பறிமுதல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## படகு விபத்தில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலிகளுக்கு நடுகற்கள் திரை நீக்கம்

27-06-2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தில் வீரச்சாவடைந்த நான்கு கடற்கரும்புலிகளுக்கும் வீரவணக்க கூட்டங்கள் இடம் பெற்று, நினைவுக் கற்கள் திரைநீக்கம் செய்துவைக்கப் பட்டுள்ளன.

கடற்கரும்புலி கப்டன் ஈகை வண்ணனின் திருவுருவப்படம் திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டு, நல்லூர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பாலகுமார் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

யாழ். பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன், கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி. பூரணி தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஆகியோரின் வீரவணக்க உரைகள் இடம்பெற்றன.

கடற்கரும்புலி லெப். கேணல் அமுதம் அல்லது ஈழப்பிரியாவின் திருவுருவப்படம் வல்லை. இந்து மகளிர் பாடசாலை மண்டபத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப் பட்டு கடற்புலிகளின் வடமராட்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## இ.த. அதிகார சபை குறித்து முதலில்பேச சந்திரிகா தயாராம்

### –தகவலை எரிக்சூல்ஹெய்ம் எடுத்துவருவார்?

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் இதுகுறித்த தகவலை எரிக்சூல்ஹெய்ம் மூலம் புலிகளுக்கு அனுப்பிவைக்கவுள்ளதாகவும் இணையத்தளச் செய்தியொன்று தெரிவித்திருக்கிறது.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசும் அதேவேளை இறுதித்தீர்வு குறித்தும் பேசவேண்டும் எனச் சனாதிபதி சந்திரிகா வலியுறுத்தி வந்தமை தெரிந்ததே.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் அழைப்பு

சிறிலங்காவின் சபாநாயகர் லொக்குபண்டார கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நாளை நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்ற அமர்வை கூட்டுவது தொடர்பில் ஆராயப்படவுள்ளது. ஏற்கனவே 20 ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்பட முடிவு எடுக்கப்பட்டுள்ள போதும், எதிர்கட்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமூகவிரோதிகளுக்கு எதிராக வவுனியாவில் பண்டாரவன்னியன் படை துண்டுப்பிரசுரம்

தேசத்தின் விடுதலைக்காக சமூக விரோதிகளை அழிக்க நாம் ஒரு போதும் தயங்கமாட்டோம் என்று தெரிவித்து விஷேட படைப்பிரிவு பண்டார வன்னியன் படை என்ற பெயரில் வவுனியாவில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, மாபெரும் தியாகங்களையும் பல்வேறு அர்ப் பணிப்புகளையும் செய்து பல நெருப்பாற்றுகளை கடந்து உலகமே வியக்கும் நிலையில் வெற்றியின் சிகரத்தில் நிற்கும் தமிழீழத் தேசிய விடுதலை போராட்டத்தை அழிப்பதற்கும் ஒன்றுபட்டுள்ள தமிழினத்தை சிதைப் பதற்கும் எதிரியானவன் மேற கொள்ளும் அனைத்து இராணுவ அரசியல் புலனாய்வு தந்திரோபாய அணுகுமுறைகளுக்கு உட்பட்டு தேசத்துரோகச் செயல்களிலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 14 வருடங்களுக்கு முன்காணாமல் போனவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு

கடந்த 14 வருடங்களுக்கு முன் ஏறாவூர்ப் பொலிஸ் முகாமில் வைத்து பிடிக்கப்பட்டு காணாமல் போனவர் இருப்பதாக இலங்கைக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

1990.12.12 அன்று மயிலவெட்டுவான் என்னும் இடத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு வேலைக்குச் சென்று திரும்பிய கதிர்காமத்தம்பி சாந்தலிங்கம் என்ற நபரே இவ்வாறு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு பிள்ளைகளின் தந்தையான இவரது மனைவியான ராசய்யா கலாநிதி என்பவர் தற்போது கொம்மாந் துறையில் வசித்து வருகிறார். இவருக்கு இது பற்றி மூன்று நாட்களுக்கு முதல் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் இது பற்றிய முழுமையான தகவல் பெற்றுத் தரப்படவில்லை என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

காணாமற் போன இவரது பெற்றோர் செட்டிபாளையத்தைச் சேர்ந்தவராவார்.

## 15 மீனவர்கள் விடுவிப்பு

15 சிறிலங்கா மீனவர்களை இந்தியா விடுவித்துள்ளது. அத்துடன் அவர்களை கைது செய்யும்போது கைப்பற்றிய மூன்று படகுகளும் விடுவிக்கப்பட்டன. பல்வேறு தருணங்களில் கைது செய்யப்பட்ட இவர்கள் தமிழ் நாடு சிறைகளில் வைக்கப்பட்டிருந்தனர் இவர்களை இராமநாதபுரம் நீதிமன்றம் விடுவித்திருக்கின்றது.

## வவு. வளாக கல்விசார் நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்


(செட்டிகுளம்)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்விசார் நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக நிர்வாகம் அறிவித்துள்ளது. கடந்த 22ஆம் திகதி முதல் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நடத்திய போராட்டம் துணைவேந்தரின் உறுதி மொழிகளையடுத்து முடிவுக்கு வந்தது. எனினும் நேற்று முன்தினம் முதல் நிர்வாக உத்தியோகத்தர்களும் கல்வி சாரா ஊழியர்களும் மேற்கொண்டுவரும் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் காரணமாக கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்தன.

இதனையடுத்து நேற்று முதல் கல்விசார் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (21)

# லெப். கேணல் கங்கை அமரன் நினைவாக கிராஞ்சியில் மண்டபம் திறந்து வைப்பு





(அலுவலகசெய்தியாளர்)

சிறிலங்காப்படையின் ஊடுருவித் தாக்கும் அணியினரின் தாக்குதலில் ஆனைவிழுந்தான் பகுதியில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலிகளின் தளபதி லெப். கேணல் கங்கை அமரன் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளான நேற்று கிராஞ்சிப்பகுதியில் அமைக்கப்பட்ட கங்கை அமரன் நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாலை 5.40 மணிக்கு கிராஞ்சிப் பகுதியில் உள்ள கடற் புலிகளின் தளம் ஒன்றில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொது ஈகச் சுடரினை மூத்த தளபதி கேணல் சொர்ணம், கடற்புலிகளின் தளபதிகளான மங்களேஸ், கோகுலன், கடற்புலிகளின் மகளிர் சிறப்புத் தளபதி ஜெறோமினி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார்.

கடற்புலிகளின் கொடியினை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

# கரும்புலிகள் நாள் தொடர்பாக கிளி.யில் கிராமந்தோறும் எழுச்சி உரைகள்

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கரும்புலிகள் நினைவுதின எழுச்சி உரைகள் கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறையினரால் கிராமம் கிராமமாக தற்போது நடாத்தப் பெற்று வருகின்றது.

கிளிநொச்சிப் பிரதேசப் பொறுப் பாளர் விழியன் தலைமையில் போராளிகள் நாவேந்தன், அலை இன்பன் ஆகியோர் கிளிநொச்சிப் பிரதேச மக்கள் மத்தியில் மேற்படி கரும்புலிகள் நினைவுதின எழுச்சி யுரைகளை வழங்கிவருகின்றனர்.

நேற்றுப் பிற்பகல் 4.00 மணிக்குஆனந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பிரதேசப் பொறுப்பாளர்விழியன் தலைமையில்மேற்படி எழுச்சி யுரைகள் இடம் பெற்றன.

அதனைத்தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் விநாயகபுரம், ஜெயந்தி நகர், கனகபுரம் , திருநகர் ஆகிய கிராமங்களிலும் மேற்படிகரும புலிகள் நினைவுதின எழுச்சி உரைகள் இடம்பெற்றன.

மேற்படி எழுச்சியுரை நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# பள்ளிகள் தொடர்பான வினாக்கொத்து கல்விக் கழகத்தினால் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக்கல்வி வலய சகல பள்ளி முதல்வர்களுக்கும், தமிழீழக் கல்விக்கழகத்தினால் கடந்த மாதம் வழங்கப்பட்ட பள் ளிகள் தொடர்பான வினாக் கொத்துப்படிவப் பொத்தகங்கள் வழங்கப் பெற்றுள்ளது.

தமிழீழக் கல்விக் கழகத்தினால் வழங்கப் பெற்ற மேற்படி வினாக் கொத்துப்படிவப் பொத்தகங்கள் இரண்டினையும் பூரணப்படுத்தி எதிர்வரும் 02.07.2004 அன்று கிளிநொச்சி கல்வி வலயத்தில் நடைபெறவுள்ள பள்ளி முதல்வர் களுக்கான கலந்துரையாடலில் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப் பாளர் வேண்டியுள்ளார். (சோ)

## திறப்பு விழா

முல்லை பொருளாதார அபிவி ருத்தி நிறுவனத்தின் அனுசரணை யுடன் இயங்கும் கிராமிய அபி விருத்தி வங்கி முள்ளியவளைப் பிரதேசக் கிளை வரும் வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு இவ் வங்கித் திறப்பு விழா நிகழ்வு நடைபெறவுள்ளது.

# கிளி.கலைபண்பாட்டு மண்டபத்தில் மாதாந்த முழுநிலாக் கலையரங்கு

கிளி.மாவட்ட அரசியற்துறையின் ஆதரவுடன் கிளி.அழகியல் கலாமன்றத்தை இணைத்து தமிழீழ நுண்கலைக்கல்லூரி நடாத்தும் ஆடிமாதத்திற்கான முழுநிலாக் கலையரங்கு வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதில் இணுவையூர் இராதாகிருஷ்ணன், சு.கோபிதாஸ் ஆகியோரின் வயலின் இசையும் "அறிமுகமும் உருமுகமும்" எனும் சிறப்புநாடக அரங்கும் நடைபெறவுள்ளது.

# புது.பொன்னம்பலம் மருத்துவமனையில் பெண்நோயியல் நிபுணர் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் நவீனன் அவர்களால் எதிர்வரும் 02.07.2004 அன்று பெண் நோயி யல் சிகிச்சையும், கர்ப்பப்பை சம்பந் தமான நோய்களுக்கான சிகிச்சை களும் ஆலோசனைகளும் வழங் கப்படவுள்ளது. அத்துடன் அவசி யம் மேற்படுமிடத்து இலவச சத்திர சிகிச்சையும் நடைபெற ஏற்பாடாகி யுள்ளது. எனவே 01.07.2004 அன்று மேற்படி வைத்தியசாலையில் நடைபெறவுள்ள கிளினிக்கில் தெரிவு செய்யப்படுவோருக்கு மட்டுமே சத்திரசிகிச்சைகளும் ஆலோசனை களும் வழங்கப்படுமெனவும், சிகிச்சை பெறவேண்டிய நோயா ளர்கள் அன்றைய தினம் வெளி நோயாளர் பிரிவிற்கு சமுகமளிக் கும் வண்ணம் மருத்துவமனைப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.(சோ)

# யாருடைய தூண்டுதலாலும் நாம் கட்டடத்தை கோரவில்லை

– வவு. வளாக மாணவர் அமைப்பு தெரிவிப்பு

வவுனியா வளாகத்துக்குச் சொந்தமான பார்க் வீதியிலுள்ள கட்டடத்தை தாம் சில சக்திகளின் தூண்டுதலால் கோரிப் பெற்றதாக வெளியிடப்பட்ட கருத்தை வவுனியா வளாக மாணவர் அமைப்பு மறுத் துள்ளது. இது தொடர்பாக மாண வர் அமைப்பினர் தெரிவித்துள்ள தாவது; வவுனியா வளாக மாணவர் களாகிய நாங்கள் கடந்த மாதம் 25.05.2004 ஆம் திகதி ஒரு மகஜர் ஒன்றினை வளாக முதல்வரிற்கு வழங்கி அதிலுள்ள கோரிக்கை களினை அவர்கள் நிறைவேற்று வதற்கு ஒரு காலக்கெடுவும் வழங்கி யிருந்தோம் அக்காலக் கெடுவிற்குள கோரிக்கைகள் நிறைவேற்ற தவறப் பட்ட சந்தர்ப்பத்தில் கடந்த 22.06.2004 ஆம் திகதி முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து போராட்டம் நடத்தி யிருந்தோம். அந்நடவடிக்கையின் போது பிரசன்னமாகியிருந்த துணைவேந்தர் திரு.மோகனதாஸ், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு.K.கணேஸ், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவநாதன் கிஷோர், வவுனியா வளாக முதல்வர் திருமதி ராஜேஸ் வரி மகேஸ்வரன் மற்றும் பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் என்போர் பிரச்சினைகளை ஆராய்ந்து அது நியாயமானது எனக் கருதி மாணவர்களின் அனைத்துக்கோரிக் கைகளிற்கும் தீர்க்கமான பதிலினை கூறுவதோடு மட்டுமல்லாமல் எழுத்து மூலமாகவும் உறுதிப்படுத்தி மாண வர்களிடம் வழங்கியிருந்தார்கள்.

இந் நடவடிக்கையின் பின்னர் தமது நடவடிக்கைகளை ஆரம் பிக்கவேண்டிய கல்விசாரா ஊழி யர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து பகிஷ்கரிப்பில் ஈடுபடுவ தாக நாம் அறிந்தோம். ஆனால் நேற்றைய பத்திரிகையில் வெளிப் படுத்திய கருத்துக்களை வவுனியா வளாக மாணவர்களா கிய நாங்கள் முழுதாக மறுக்கிறோம்.

அதாவது மாணவர்கள் பார்க் வீதியில் உள்ள வளாகத்திற்குச் சொந்தமான கட்டடத்தினை விரைவாகத திறக்கும் படியும் அதனுள் எமது கோரிக்கைக்கான இட ஒதுக்கீட்டி னைச் செய்யுமாறும் வேண்டியிருந தோம். மாறாக சில சக்திகளின் தூண்டுதலால் நாம் அக்கட்டடத்தி னைக் கோரியுள் ளோம் என்பதை மறுக்கிறோம் எனத் தெரிவித்துள் ளனர்.

## விபுல விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம்

வவுனியா பண்டாரிக்குளம் விபுலா னந்தாக் கல்லூரியில் அமைக்கப் பெற்ற சிறிவிபுல விநாயகர் ஆலய மகாகும்பாபி ஷேக நிகழ்வு வரும் வெள்ளிக் கிழமை காலை 9.11 மணிமுதல் 10.11 மணிவரையான நேரத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வுகள் இன்று காலை 7மணிக்கு ஆரம்பமாகும். நாளை காலை 8மணிக்கு எண் ணெய் சாத்துதல் ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறும்.


## வரிவிளம்பரம்

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்பு

பூநகரி நல்லூர் மவி. 03-07-2004 சனிக் கிழமை காலை 9.20 மணி கிளி/ புதிய உயர் கல்வி நிலையம் பகல் 1.30.மணி (4619)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம்(இறபர் முத்திரை) உட னுக்குடன் செய்து கொள்ளவும். போட்டோ கொப்பி லேமனேட்டிங் போன்றவைகளையும் உடனுக் குடன் செய்துகொள்ள பிள்ளை யார் பொத்தகசாலை கண்டி வீதி கிளிநொச்சி.T..P. 021 228 5750

(சி.9823)

நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

## இசைநாடக விழா

02 – 03 – 04 ஜூலை 2004

### கருத்தரங்குகள்

காலம்: ஜூலை 03,04-2004 (சனி, ஞாயிறு)

இடம்: மறைக்கல்வி நடுநிலைய மண்டபம்,யாழ்ப்பாணம்

நேரம்: மு.ப.9.30-1.00 மணி, பி.ப. 2.30-5.00 மணி

இசைநாடகம் தொடர்பாக பல்வேறு தலைப்புக்களில் கருத்துரைகள் துறைசார் புலமையாளர்களால் வழங்கப்படும்.

### இசை நாடக அளிக்கைகள்

காலம்: ஜூலை 02,03,04-2004 (வெள்ளி, சனி, ஞாயிறு)

இடம்: திருமறைக்கலாமன்ற அரங்கு

நேரம்: மாலை 7.00 மணி

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள சிறந்த இசை நாடகங்கள் அந்தந்தப் பிரதேசக் கலைஞர்களால் மேடையேற்றப்படும்.

02. 07. 2004 வெள்ளி

*. ஸ்ரீ வள்ளி

*. சத்தியவான் சாவித்திரி

03. 07. 2004 சனி

*. பூதத்தம்பி

*. பக்தநந்தனார்

04. 07. 2004 ஞாயிறு

*. அரிச்சந்திரா – அயோத்திய காண்டம், காசி காண்டம். மயானகாண்டம்

கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2393

திருமறைக்கலாமன்றம்
(சி/10107)

## விண்ணப்பம் கோரல்

நிதித்துறை வழங்கற்பகுதியால் தொடங் கப்படவுள்ள தையல் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான ஆண்,பெண் இருபாலாரி டமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படு கின்றன. பயிற்சி நெறியில் தேர்ச்சியடை வோர் தகுந்த சம்பளத்துடன் பணிக்கு அமர்த்தப்படுவர், பயிற்சி செலவுகள் யாவும் (உணவு உட்பட) வழங்கற்பகுதி யால் பொறுப்பேற்கப்படும்.

குறிப்பு:- தையல் அனுபவம் உடைய இருபாலாரும் சம்பளத்துடன் பணிக்கமர்த்தப்படுவர்.

வேண்டுகை முடிவுநாள்:- 20.07.2004

வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

அந்திவானம் பதிப்பகம்
கிளிநொச்சி.
அந்திவானம் பதிப்பகம்,
புதுக்குடியிருப்பு.

ஆளுகை,
வழங்கற்பகுதி,
நிதித்துறை.

(4758)

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் தனேஸ்குமார் விசுவமடு மேற்கு விசுவமடு என்னும் முகவரியைச் சேர்ந்த எனது பணப் பேஸ், தேசிய அடையாள அட்டை இல.802904258V, சாரதிப் பத்திரத் துடன் 27-06-2004ஆம் திகதி தர்மபுரத திற்கும், விசுவமடுவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் ஸ்ரீபன் வெதுப்பகம் ரெட்பானா அல்லது ஈழநாதம் பணிமனை கிளி நொச்சியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(4760) தகவல்: சு.தனேஸ்குமார்

## கண்ணீர் அஞ்சலி



அமரர் சின்னத்தம்பி நவரத்தினம்

இல. 55, திருநகர்,
கிளிநொச்சி.

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 21-12-1933 | 29-06-2004 |

இளவேனில் வாணிபம் கிளிநொச்சியின் கணக்குப் பதிவாளராகிய ந. ஜெயராஜ்சின் தந்தையார் ஆகிய,

சி. நவரத்தினம் அவர்களின்

திடீர் மறைவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவுத் துயரால் துயருறும் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்து கொள்வதுடன் அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு இறையருள் வேண்டியும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்,
போராளிகள், பணியாளர்கள்,
இளவேனில் வாணிபம்.

(4759)

# ஈராக்கில் வெடிகுண்டுத்தாக்குதலில்

# அமெ. இராணுவ வாகனம் பலத்தசேதம்

## மூவர் பலி, பலருக்குக் காயம்

(பாக்தாத்)

**ஈராக்கின் இடைக்கால அரசிடம் அமெரிக்கா ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்த அடுத்த நாளான நேற்று மற்றுமொரு வெடிகுண்டுத் தாக்குதல் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டதில் மூன்று அமெரிக்கப்படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளதோடு பலர் காயமடைந்துள்ளனர்.**

பாக்தாத்தின் கிழக்குப்பகுதியில் அமெரிக்க வாகன தொடரணி மீது இந்த வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் இராணுவ வாகனம் ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது. இதில் பயணம்செய்த படையினரே கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.

ஈராக்கிற்கு உதவி செய்யும் தங்களை தீவிரவாதிகள் ஏன் கொலைசெய்கிறார்கள் என்று தமக்குத் தெரியவில்லை என அமெரிக்கப்படைச் சிப்பாய் ஒருவர் கூறியுள்ளார். இவ்வாறான தாக்குதல்கள் ஈராக்கின் பல பகுதிகளிலும் அமெரிக்கக் கூட்டுப்படையினருக் கெதிராக தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது.



ஈராக்கில் தீவிரவாதிகளால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்ட அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த இவர் பாகிஸ்தான் பிரஜையாவார்.

## துருக்கியில் 30 பேர் காயம்

(இஸ்தான்புல்)

துருக்கியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள நேட்டோ மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் பெரும் கலவரமாக வெடித்துள்ளது. இந்தக் கலவரத்தில் 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இஸ்தான்பூல்லில் நேற்று முன் தினம் தொடங்கியுள்ள நேட்டோ மாநாட்டிற்கு எதிர்ப்புத்தெரிவித்து கடந்த சில நாட்களாக இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

இதனால் பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் தண்ணீரை வீசியடித்தும் ஆர்ப்பாட்டம் செய்தவர்களை கலைக்க முற்பட்டனர். இதன்போது பலர் காயமடைந்தனர்.

## அமெரிக்க கடற்படைச் சிப்பாய் தீவிரவாதிகளால் கடத்தல்

(வோஷிங்டன்)

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த ஒருவர் ஈராக்கில் காணாமற் போயுள்ளதாக அமெரிக்கப் படையினர் கூறியுள்ளனர்.

காணாமற்போன அமெரிக்கப் படைவீரர் லெபனானை பூர்வீக குடியாக கொண்டவரென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,இவரை ஈராக்கிய தீவிரவாதிகள் பணயக் கைதியாக பிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர். ஈராக்கில் சிறைக்கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் பணயக கைதியின் தலை துண்டிக்கப்படுமென எச்சரித்துள்ளார்.

இதேவேளை மூன்று மாதங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்க இராணுவ வீரரை ஈராக் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று அரச தொலைக்காட்சியான அல்- அஜீரா செய்தி வெளியீட்டுள்ளது.

அமெரிக்க வீரரின் கண்களைக் கட்டிவிட்டு தலையின் பின்புறமாக துப்பாக்கியால் ஈராக் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றுள்ளதாக செய்தி வெளியிட்ட தொலைக்காட்சி கொடூரமான காட்சிகளை வெளியிடாமல் தடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஈராக் நிர்வாகத்தை ஈராக் இடைக்கால அரசிடம் அமெரிக்க கூட்டுப்படை கையளித்தசிலமணி நேரத்தின் பின்னர் இந்தக் கொலை நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈராக் விடயத்தில் அமெரிக்கா தனது கொள்கையினை மாற்றிக் கொள்ளவில்லை என்பதனைக் கண்டித்து அமெரிக்க வீரரை கொன்றுள்ளதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.



பாக்தாத் சந்தைப்பகுதியில் இணைந்துகாவல் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினரும் ஈராக்கிய பொலிசாரும்

## பேருந்து நதியில் வீழ்ந்தது சீனாவில் 21பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் தென்பகுதியில் பயணிகள் பஸ்வண்டியொன்று நதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியதில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 24 பேர் தப்பிப்பிழைத்துள்ளனர். எனினும் வாகனங்கள் பற்றிய தரப்பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அரச அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## தூதுவர் நியமனம்

(வோஷிங்டன்)

ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதுவரை அமெரிக்கா நியமித்துள்ளது. தூதுவராக ஜோன் நெக்றே பொண்டேயை அமெரிக்கா, ஈராக் நிர்வாகத்தைஇடைக்கால அரசிடம் கையளித்த பின்னர் நியமித்துள்ளது.

ஜோன் நெக்றே பொண்டே கடந்த 10 வருடத்தில் ஈராக்கிற்கான முதல் அமெரிக்கத் தூதுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்கொரிய வாகன உற்பத்தி நிறுவனத்தின் 40 ஆயிரம் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

(சியோல்)

தென்கொரியாவில் வாகன உற்பத்தியில் முதலிடம் பெறும் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் 40 ஆயிரம் தொழிலாளர்கள் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தினை ஆரம்பித்துள்ளார்கள். சம்பள உயர்வு கோரிநடத்தப்படும் போராட்டம் ஏனைய துறைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம் என்று அரச அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த நிறுவனம் நாட்டின் மிகவும் பெரியதும் பலம் பொருந்தியதுமான தொழில்சங்கத்தைக் கொண்டதாகும். இந்த நிறுவனம் கொரிய வர்த்தக சங்க கூட்டமைப்பிலும் அங்கம் வகிக்கின்றது.

இந்த கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் சம்பள உயர்வு, வாழ்க்கைத் தரமேம்பாடுகளை வலியுறுத்தி கடமைகளை பகிஷ்கரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

## லிபியாவுடன் தூதரக உறவை அமெ. மீண்டும் ஏற்படுத்தும்

### - சனாதிபதி புஷ் அறிவிப்பு

(வோஷிங்டன்)

இரசாயன உயிரியல் மற்றும் அணுவாயுத திட்டங்களை களைந்து விடுவதாக லிபியாவில் சனாதிபதி கடாபி உறுதியளித்துள்ளதையடுத்து அமெரிக்கா அந்நாட்டுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

பயங்கரவாத செயல்கள் காரணமாக 24 ஆண்டுகளுக்கு முன்னர் லிபியாவுடனான தூதரக உறவுகளை அமெரிக்கா துண்டித்துக் கொண்டது. பயங்கரவாத செயல்களைப் பரப்புவதாக அமெரிக்கா ஆண்டு தோறும் அறிவித்துவரும் ஏழு நாடுகளில் லிபியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

லிபியா இரசாயன உயிரியல், அணுவாயுத திட்டங்களை கைவிடுவதாக அறிவித்துள்ளதால் தான் அந்நாட்டுடன் மீண்டும் உறவுகளை மேற்கொள்வதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியுள்ளார்.

## வடகொரியாவிற்கு ரஷ்யா உணவுப் பொருட்கள் அன்பளிப்பு

(மொஸ்கோ).

பட்டினியில் சிக்குண்டிருக்கும் வடகொரியாவுக்கு ரஷ்யா 35 தொன் எடை கொண்ட உணவுப் பொருட்களை கப்பல் மூலமாக அனுப்பி வைத்துள்ளது.

உணவுப் பஞ்சம் காரணமாக அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் வட கொரியாவின் பதற்றத்தினைக் குறைப்பதற்கு 35 தொன் எடை கொண்ட தானியங்களைற் தாம் அனுப்பி வைத்துள்ளதாக ரஷ்ய பிரதி வெளிவிவகார அமைச்சர் யூரி பெடோ போவ் கடந்த சனிக்கிழமை வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளார்.

முறையற்ற பொருளாதாரக் கொள்கை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வடகொரியாவின் வாழ்க்கைத்தரம் நலிவடைந்திருந்தது தெரிந்ததே.

வடகொரியா அதன் அணுவாயுதத் திட்டத்தினைக் கைவிடின் அதற்கு உதவுவதற்குத் தயாராய் இருப்பதாகப் பல நாடுகள் அறிவித்துள்ளமை தெரிந்ததே.




"புஷ் இங்கு வர வேண்டாம்" என்ற துருக்கிய வாசகத்தை ஏந்தி ஸ்தான்புல் லில் ஆர்ப்பாட்டம் நடத்தும் துருக்கிய ஆர்ப்பாட்டக் காரர்கள்.

## சிங்கப்பூருக்கு முதலிடம்

ஆசிய நாடுகளில் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து அரசியல் பொருளாதார பாதுகாப்பு குழு ஆய்வு நடத்தியது. இதனடிப்படையில் நீதித்துறையை நேர்மையாகவும் தரமாகவும் பயன்படுத்தும் நாடுகளில் சிங்கப்பூர் முதலிடம் பெற்றது.

ஹொங்கொங் இரண்டாவது இடத்தையும் ஜப்பான் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

2001 ஆம் ஆண்டிலிருந்து நீதியை நிலைநாட்டுவதில் சிங்கப்பூர் முதலிடத்தையே பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



நேட்டோ அமைப்பின் இராணுவ அதிகாரியான ஜனரல் யேமீஸ்ஜோன் ஆப்கானிஸ்த்தான் தலைவர் கமிட்காசையை காபூலில் சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

## கைதிகளுக்கிடையில் அழகிப் போட்டி

(நைரோபி)

கென்யாவில் விநோதமான போட்டியொன்று நேற்று முன்தினம் நடந்துள்ளது.கென்யாவிலுள்ள தலைநகர் நைரோபியிலுள்ள சிறைச்சாலையில் பெண்கைதிகளுக்கிடையே அழகிப்போட்டியொன்று நடத்தப்பட்டுள்ளது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளை மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டும் என்னும் அடிப்படையில் இந்தப் போட்டி நடத்தப்பட்டுள்ளதாக கென்ய அரசுவும் சிறைச்சாலை அதிகாரிகளும் கூறியுள்ளனர்.

# தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் மட்டு, திருமலையில் சிறப்பு மருத்துவ முகாம்

## இருதய சிகிச்சை நிபுணர்களும் பங்கேற்பு

**தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் வெளிநாட்டு இருதய சத்திர சிகிச்சை நிபுணர்களின் பங்கேற்புடன் திருமலை,மட்டக்களப்பு மாவட்டங்களில் சிறப்பு மருத்துவ சிகிச்சையையும் ஆலோசனைகளையும் வழங்கினர். இதன் மூலம் பெருமளவானோர் பயன்பெற்றனர்.**

திருமலை,மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைந்துள்ள திலீபன் மருத்துவ சேவை நிலையங்களில் கடந்த 25,26,27 ஆகிய திகதிகளில் மருத்துவமுகாம்நடத்தப்பட்டது. பாட்டாளிபுரம் திலீபன் மருத்துவ சேவையில் 165 நோயாளர்கள் சிகிச்சையும், ஆலோசனையும் பெற்றனர். இதில் இனங்காணப்பட்ட 20 இருதய நோயாளர்களுக்கு எக்கோ காடியோ கிறாப் கருவி மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 05 நோயாளர்களுக்கு சத்தி ரசிகிச்சை செய்யவேண்டுமென கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து 26 ஆம் திகதி சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 520 நோயாளர்கள் சிகிச்சையும், ஆலோசனையும் பெற்றனர் இங்கு 30 இருதய நோயாளர்களுக்கு எக்கோ காடியோ கிறாப் மூலம் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 07 நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டுமென கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 27ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் கதிரவெளிதிலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் 398 நோயாளர்களுக்கு சிகிச்சையும், ஆலோசனையும் அளிக்கப்பட்டது. இதில் 03 நோயாளர்களுக்கு எக்கோ காடியோ கிறாப் மூலம் பரிசோதனை செய்யப்பட்டது இதில், நோயாளி ஒருவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டு மெனவும் கண்டுபிடிக்கப்பட்டது. கண்,பல் என்பனவற்றிற்கான சிகிச்சை உள்ளிட,பொதுவான நோய்களுககும் மேலும் பலர் சிகிச்சை பெற்றனர். இச்சிகிச்சைகள் நவீன ஆய்வு கூட வசதியுடன் மேற் கொள்ளப்பட்டன இதில் விடு தலைப்புலிகளின் வைத்திய கலா நிதி பாலன் மற்றும் வெளிநாட்டு இருதயசிகிச்சை நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

அரச சுகாதார வசதிகள் மிகக்குறைவான இவ்வேளையில் இவ்வாறான மருத்துவமுகாம்கள் தொடர்ந்துநடைபெறவேண்டு மெனவும் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.


## பிரிவுபசாரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தபால் ஊழியர்கள் தமது பணியின்நிமிர்த்தம் வவுனியா மாவட்டம் செல்லும் பிரதம தபால் அதிபர் இராமச்சந்திரனுக்கும்,30 வருட காலம் சேவை செய்த தபால் விநியோகஸ்தர் சண்முகநாதனுக்கும்பிரிவுபசாரவைபவத்தினை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தினர். (20)

## கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலையில் மாவீரர் சாள்ஸ் நினைவாக நிகழ்வு

முல்லைத்தீவு கரிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலையில் வீரவேங்கை சாள்ஸ் என்று அழைக்கப்படும் அருளம்பலம் சந்திரமோகனின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பி.பகல் 3.00மணிக்கு பாடசாலை அதிபர் ஜேசுதானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசியக்கொடியினை போராளி தயாளன் ஏற்றி வைத்தார். மாவீரரின் திருவுருவப் படத்திற்கு பெற்றோர் மலர் மாலை அணிவித்தனர்.அதனை தொடர்ந்து நினைவுரையினை மணவாளன் பட்ட முறிப்பு கிராம அரசியல் பொறுப்பாளர் திகழ்வண்ணன், ஆசிரியர் செல்வி இந்துமதி ஆகியோர் நிகழ்த்தியதைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுடன் நினைவு நிகழ்வு நிறைவு பெற்றது. இதில் பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வன்னேரிக்குளம் ஜெயபுரம் பிரதான பாதையில் புதிதாகக் கட்டப்பெற்றுவரும் புதிய பாலத்தினை படத்தில் காணலாம். (படம் சோதி)

## வீதியின் 150மீற்றர் புனரமைப்பு எப்போது?

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதான வீதி புனரமைக்கப்பட்ட நிலையில் சுமார் 150 மீற்றர் இடைவெளி வீதி புனரமைக்கப்படாமையால் அப் பகுதி குன்றும் குழியுமாகவுள்ளது. முள்ளியவளை அன்னை திரேசா ஆலயத்திற்கு முன்பாக இருந்து முள்ளியவளை அரசினர் வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள இடைவெளி வீதியே புனரமைக்கப்படாமல் உள்ளது. (ஆ)

### சர்வதேச கூட்டுறவாளர் தின

## மாகாண மட்டப் போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெற்றோர்

(முல்லைத்தீவு)

82ஆவது கூட்டுறவாளர் தின விழாவின் மாகாணமட்டத்திலான பேச்சு, கட்டுரை, சித்திரம், வினாடி வினா போன்ற போட்டிகள் கடந்த சனிக்கிழமை திருகோணமலை உவர்மலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினூடாக கலந்து கொண்ட போட்டியாளர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

பேச்சு மேல் பிரிவு ப.நிறோஜினி புதுக்குடியிருப்பு ம.வி.மூன்றாம் இடத்தையும் ஆங்கிலப் பேச்சு கீழ்ப்பிரிவும்.நிருஜாபாரதிவித்தியாலயம் 2ஆம் இடத்தையும் கட்டுரை கீழ்ப்பிரிவு க.நந்தினி பாரதிவித்தியாலயம் 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

சங்கங்களுக்கிடையேயான வினாடிவினா போட்டியில் பனங்காமம்பற்று ப.நோ.கூ.சங்கம் மூன்றாம்இடத்தை பெற்றுக் கொண்டது. முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து சென்ற போட்டியாளர்கள் அனைவரும் வெற்றியீட்டி வந்துள்ளனர் என முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மோ.சிவமயம் தெரிவித்தார். (20)

## விசுவமடுப் பிரதேசத்தில் முன்பள்ளிகள் அனைத்தையும் புனரமைக்க ஏற்பாடு

### திங்கட்கிழமை முதல் பணிகள் ஆரம்பம்

(உடையார்கட்டு)

விசுவமடுப் பிரதேசத்தில் இயங்கிவரும் சமூகபொருளாதார வளர்ச்சி நிறுவனப் பராமரிப்பிலுள்ள பதினான்கு முன்பள்ளிகளைச் சேர்ந்த பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகத்தினருக்கும், சமூகப் பொருளாதார அபிவிருத்திக் குழுக்களுக்குமான ஒன்று கூடல் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் தலைமையில் கடந்த வெள்ளி ஆரம்பமானது.

இங்கு முன்பள்ளிச் செயற்பாடுகள் பற்றிக் கருத்துரை வழங்கிய இணைப்பாளர் யூட் யுத்த காலத்திலும், சமாதானச் சூழலிலும் முன்பள்ளிகளின் பராமரிப்பிலும்,வளர்ச்சியிலும் சிறார்களின் கல்வியில் ஆரோக்கிய வாழ்வில் முழுப்பங்களிப்பை வழங்கியது தமிழர் புனர்வாழ்வுக்கழகமே. முன்பள்ளிகளில் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கான வேதனத்தில் ஒரு பகுதியை அன்றிலிருந்து இன்றுவரை வழங்கி வருவதும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே.

இந்நிலையில் சிறுவர் உரிமை தொடர்பாகவும் சிறுவர் கல்வியில் அக்கறை கொண்டதாகவும் கூறிக் கொள்ளும் வெளிநாட்டு நிறுவனங்கள் கூட இவ் விடயங்களில் பெரிதும் அக்கறை கொள்ளவில்லை. பாராமுகமாகவே உள்ளனர். எனவே தான் தற்போது விசுவமடுப் பிரதேசத்தில் இயங்கி வரும் அனைத்து முன்பள்ளிகளிற்குமான புனரமைப்புப் பணியை ரூபா பதினைந்து இலட்சத்திற்கும் அதிகமான நிதித்திட்டமிடலுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆரம்பித்துள்ளது. புனரமைப்புப்பணி 28ஆம்திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு முன்பள்ளிகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறுவதற்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்றும் உறுதுணையாய் இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

## இளம்பராய வளர்ச்சி விழிப்பூட்டல் செயலமர்வு

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் முல்லை மாவட்ட சுகாதார வைத்தியதிகாரியினால் பிரதேச மட்டத்தில் இளம்பராய வளர்ச்சிகள் தொடர்பான விழிப்பூட்டும் கருத்தூட்டல் செயலமர்வு நடைபெற்று வருகின்றது.செம்மலை, முள்ளிவாய்க்கால் மேற்கு புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரம், கற்சிலைமடு, மூங்கிலாறு, மாங்குளம் போன்ற இடங்களில் 3நாள் செயலமர்வு நடைபெற்று வருகின்றது.

இதில் கற்பவதிகள், 5வயதிற்குட்பட்ட குழந்தைகளின்தாய்மார்கள் என 30பேர்கலந்துகொண்டு பயன்பெறுகின்றனர்.இவர்களுக்கான பயிற்சிகளை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி து.வி. ஜெயக்குலராஜா, மேற்பார்வை மருத்துவமாது, பொதுசுகாதார பரிசோதகர்கள், மருத்துவமாதுக்கள் ஆகியோர் வழங்குகின்றனர். (20)

## பெற்றோர்களின் பங்களிப்புடன் இரு முன்பள்ளிகள் திறப்பு

வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன ஆதரவில் அப் பகுதிப் பெற்றோர்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட இரண்டு முன்பள்ளிகளும் திறந்து வைக்கப்பட இருக்கின்றன.

பன்றிக்கெய்தகுளம்,ஆறுமுகத்தான் புதுக்குளம் ஆகிய இரு முன்பள்ளிகளுமே இவ்வாறு திறந்து வைக்கப்படவுள்ளன. இவை இரண்டிலும் 35 இற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி கற்பதனால் அவர்களின் உடனடித் தேவையை நிறைவு செய்வதற்காகப் பெற்றோர்கள் தங்களால் ஆன உள்ளூர்மூலப்பொருட்களைக் கொண்டு இவற்றை ஆக்கியுள்ளனர்.

இம்முன்பள்ளிகளின் திறப்பு விழாஎதிர்வரும் 7-ஆம் திகதி அன்று வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் க. இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சி.திருஞானசம்பந்தமூர்த்தி, புளியங்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் திலீப் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

## பிரதான வீதியருகேயுள்ள பற்றைக்காடுகள் அகற்றல்

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலிருந்து உருத்திரபுரம் போகும் பிரதான வீதியின் ஓரமாக இருந்த பற்றைக்காடுகள் மக்களால் அகற்றப்பட்டு வருகின்றன.இந்த துப்புரவுப்பணி நிவாரண அடிப்படையில் மக்களால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதன் மூலம் அவ்வீதியின்



போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த மரங்கள், பற்றைக்காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பாதுகாப்பான போக்குவரத்தை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. (கு)

## மீளக்குடியேறிய மக்களுக்கு வீடமைப்பு அ.அ.சபை உதவி

வவுனியா வடக்கு நெடுங்கேணி வடக்கு பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களின் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் இப் பகுதியில் 126 புதிய வீடுகள் அமைக்கும் பணி செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இவர்களில் ஊனமுற்றவர், இளம் விதவைகள், விசேடதேவைக்குட்பட்டோர் என 13 பயனாளிகள் இனம் காணப்பட்டு வவுனியா வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கவனத்திற்கு கொண்டு சென்றனர் அவர்களின் நிதியாக ஒவ்வொருவருக்கும் 20000 பெறுமதியான கட்டட பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஊடாக வழங்கியது.

இதனால் குறிப்பிட்ட பயனாளிகளால் வேலை துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

# தேசிய தடகள இளையோர் விளையாட்டுப் போட்டி
# வரும் 3ஆம், 4 ஆம் திகதிகளில் யாழ்.இல் நடைபெறும்

## தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாடு

**தமிழீழ விளையாட்டுத் துறையால் நடத்தப்படும் தேசிய தடகள இளையோர் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 3ஆம்,4ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.**

சுமார் 2000 ஆம் வரையிலான வீரவீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தவுள்ள இவ்விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட மெய்வல்லுனர் சங்கமும், தமிழீழ விளையாட்டுத்துறையும் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

தமிழர் தாயகப்பகுதி வாழ் வீர வீராங்கனைகளின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இதில் வடக்கு -கிழக்குப்பகுதிகளில் உள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் இதில் பங்குகொள்வர். (33)

# கரும்புலிகள் நாளை சிறப்பாகஅனுஷ்டிக்க தீவகத்தில் விசேடநிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(தீவகம்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு யாழ்.தீவகப்பிரதேசங்களில் சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் நேற்று முன்தினம் (28.06.2004)யாழ்.தீவகத்தில் உள்ள புங்குடுதீவு,வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகள், வீதிகள், பொதுநிறுவனங்கள் என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகளில் அவ்வப் பிரதேச தேசியஎழுச்சிப் பேரவையினர், பொது அமைப்பினர், பொதுமக்கள் மாணவர்கள் எனப் பலரும் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை தீவகப் பிரதேசத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி கரும்புலிகள் நாளன்று விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. (33)

# மோட்டார் சைக்கிள் உரிமையாளரின் பெயர் விபரங்களை சேகரிக்கும் படையினர்

## பருத்தித்துறை மக்கள் மத்தியில் அச்சம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் இரு கிராமசேவகர் பிரிவுகளில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்போரின் பெயர் விபரங்களை படையினர் சேகரித்து வருவதையிட்டு மக்கள் மத்தியில் குழப்பமும் அச்சமும் தோன்றியுள்ளது.

ஜே/401,ஜே/403 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே மோட்டார் சைக்கிள் வைத்திருப்போரின் பெயர், மோட்டார் சைக்கிளின் இலக்கம், இனம், நிறம் ஆகிய விபரங்களைப் படையினர் அவ்வப் பகுதி கிராமசேவகர் ஊடாக சேகரித்து வருகின்றனர். பருத்தித்துறை முனைப்பகுதி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பருத்தித்துறை பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு மேற்படி விபரங்களை பெற்றுத்தருமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரியவருகிறது. இந்தப்பணிப்புரைக்கிணங்கவே இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. படையதிகாரியின் இந்த நடவடிக்கையால் குறிப்பிட்ட இரு கிராம சேவகர் பிரிவுகளிலுமுள்ள மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களும், மக்களும் பீதியடைந்துள்ளனர்.

# பொருளியல்துறை மாணவர்கள் உட்கட்டுமானம் குறித்து ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறை மாணவர்களால் தமிழர் தாயகப்பகுதிகளில் நிலவும் இராணுவ, அரசியல், பொருளாதார, உட்கட்டுமானத் துறைகள் பற்றி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழர் வாழ் தாயகப் பிரதேசங்களை நிர்வகிப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள துறைகளின் செம்மையான செயற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளும் விதமாகவே இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக தமிழர் தாயகப் பகுதிகளை நிர்[illegible]பதற்காக புலிகளால் உருவாக்கி திறமையாக செயற்பட்டு வரும் படையணிகள், காவல்துறை, அரசியற்துறை, பொருண்மியத்துறை, நிர்வாகத் துறை,திட்டமிடல் பிரிவு, நிதிப் பிரிவு, நீதிநிர்வாகப்பிரிவுகள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

தாயகப்பிரதேசங்களில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று பொருளியல் துறையைச் சேர்ந்த மாணவர் குழுவினராலேயே இவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (33)

# நெருப்புக் காய்ச்சலின் தாக்கம் யாழ்.குடாநாட்டில் அதிகரிப்பு

## –ஆறுமாதங்களில் 216 பேர் பாதிப்பு

யாழ்.குடாநாட்டில் நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்து வருவதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இவ் ஆண்டு ஆரம்பமாகியதிலிருந்து கடந்த 6மாத காலத்தினுள் யாழ் குடாநாட்டில் 216பேர் நெருப்புக்காய்ச்சலுக்கு இலக்காகிப் பாதிக்கப்பட்டுள்ளனரென சுகாதாரத் திணைக்களப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நோய்த்தாக்கம் கடந்த ஆண்டுகளின் விகிதாசாரத்தைவிட இவ்வாண்டு அதிகமாக இருக்கின்றமைக்கு சுற்றுச்சூழல் நலன்பேணும் நடவடிக்கைகளின் சீரற்ற தன்மையே காரணமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# மீள் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பம் கோரல்

கலைமாணிப்பகுதி 1-2001 இற்கான பரீட்சைகள் யூலை இறுதிப்பகுதியில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் மீள் பரீட்சார்த்திகள் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள வங்கிக்கிளையில் ரூபா 50/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நடைபெறும் திகதி, விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும் என்றும், தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெறவிரும்புவோர், மக்கள் வங்கி யாழ்பல்கலைக்கழகக் கிளை, கணக்கு இலக்கம் 90503இல் ரூபா50/= செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டை சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீள் தபால் உறையுடன் உதவிப்பதிவாளர், வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டுமென்றும், பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10.07.2004வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாடஅலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 200என்றும்,

கலைமாணிப்பகுதி-1-2000இற்கான பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நயினை நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினைநாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை காலை 9.00மணியளவில் இடம்பெறவுள்ளது. மிகவும் கோலாகலமான முறையில் இடம்பெறவுள்ள இத்திருவிழாவில் விசேட பூஜை ஆராதனைகளும் இடம்பெற ஏற்பாடாகியிருக்கிறது. இத்திரு விழாவில் நாட்டின் சகலபாகங்களிலிருந்தும் பெருமளவிலான பக்தர்கள் கலந்துகொள்ளவுள்ளதால் இதற்கென விசேடபோக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதாரவசதிகள், மின், குடிநீர், தொலைத்தொடர்பு வசதிகள் என்பன ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மறுநாள் (02.07) தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (33)

# பட்டச்சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கலைமாணி 2000, வணிகமாணி 2001, நுண்கலைமாணி 1999 பட்டக்கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச்சான்றிதழ்கள் நேற்று முன்தினம் முதல் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உரியவர்கள் வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படிப் பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூபா.300/= யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளையில் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேலுமொரு மருத்துவமனையை அமைக்குக மானிப்பாய் மக்கள் வடகிழக்கு ஆளுநருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் பிரதேசத்திற்கென மேலும் ஒரு வைத்தியசாலையும் மகப்பேற்று மருத்துவமனையும் அமைத்துத் தரப்படல் வேண்டுமென மானிப்பாய் பிரதேசச் சுற்றாடல் சுகாதார விவகார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஏராளமான மக்கள் செறிந்து வாழும் மானிப்பாய் பிரதேச மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஏற்கனவே மானிப்பாயில் உள்ள அரசினர் வைத்தியசாலையின் வளங்கள் போதாது இருக்கின்றமையைச் சுட்டிக்காட்டியுள்ள மானிப்பாய் பிரதேச சுற்றாடல் சுகாதார விவகாரசபை இது தொடர்பிலான கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இக்கடிதத்தில் மானிப்பாய் பிரதேசத்தில் மேலும் ஒருவைத்தியசாலையும், மகப்பேற்று மருத்துவமனையையும் நிறுவ கடந்த 2000 ஆம் ஆண்டு 23பரப்புக் காணி பிரதேச வாழ்மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தபோதும் அதனுள் கட்டடங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

# மூவர் கைது

(கொழும்பு)

நிழற்பட பிரதியாக்கல் இயந்திரத்தைப் பயன்படுத்தி போலி 1000 ரூபா நோட்டுக்களை அச்சடித்து விநியோகித்த 20 வயது யுவதியொருவரையும் இரு இளைஞர்களையும் குருநாகல் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கல்கமுவ நகரில் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை நடத்தி வரும் மேற்படி யுவதியும் சில இளைஞர்களும் இந்த வியாபாரத்தை நடத்திவந்ததாக தெரியவருகிறது. இவர்களிடமிருந்து மூன்று போலி ஆயிரம் ரூபா நோட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். மேற்படி கல்கமுவ நகரில் போலி ஆயிரம் ரூபா தாள் ஒன்றை மாற்றுவதற்கு வந்த இளைஞர் ஒருவரை கைது செய்து விசாரித்த போதுமேற்படி தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனோடு சம்பந்தப்பட்ட வேறுஒரு யுவதியையும் இளைஞனையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

## 3கோடிரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்.குடாநாட்டு நியாப் திட்டத்தின் கீழ் துரிதகிராம அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கடந்தகால யுத்த அனர்த்தங் களால் பாதிக்கப்பட்டு பின்தங்கிப் போயுள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே இந்தத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதற்காக நியாப்திட்டத்தின் கீழ் 2 கோடியே 90லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களில் கால்நடை, விவசாய, கைத்தொழில் அபிவிருத்திகளை மையமாகக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படவுள்ளன. (33)

# பிரதம படைத்துறை அதிகாரியாக ஆளுநர் அஷோக்கா ஜெயவர்த்தன?

சிறிலங்காவின் பிரதம படைத்துறை அதிகாரியாக முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் ஆளுனர் மேஜர் ஜெனரல் அஷோக்கா ஜெயவர்த்தன நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா படைத்தளபதியாகவும், பிரதம படைத்துறை அதிகாரியாகவும் கடமையாற்றி வந்த லயனல் பல[illegible]லவின் பதவிக்காலம் எதிர்வரும் முதலாம் திகதியுடன் முடிவடையவுள்ளதையடுத்து, இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் பிரதம படைத்துறை அதிகாரிப் பதவிக்கு கடற்படைத் தளபதி தயாசந்தகிரியை நியமிப்பதற்கு சிறிலங்கா சனாதிபதி தீர்மானித்திருந்தார். ஆனால் இப்பதவிக்கு ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரி ஒரு வரை நியமிப்பதே பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் அஷோக்க ஜெயவர்த்தனவை சனாதிபதி நியமிக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது. பல நாடுகளில் முப்படைகளுக்குமான தளபதியாக சிரேஷ்ட படைத்துறை அதிகாரி ஒருவரே நியமிக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

**பகுதி-03**

“ஓடுகின்ற நதியில்... நீ மீண்டும் ஒரு முறை குதிக்க முடியாது”

“ பார்த்திருந்த ஒரு ஒளியை நீ மீண்டும் பார்க்க முடியாது”

“கடந்து போன வாழ்வு கடந்ததுதான்”

“இதயத்தினுள் மின்னிய மின்னலை மீண்டும் நீ பெற முடியாது”

“Past is Past”

“கடந்த காலம் எப்பொழுதுமே கடந்து விட்டதுதான்”

* * * * * *

என் அன்பு வாசகர்களே!

‘‘Mr.Maniyam ’’ தன் சுயநல வியாபாரத்தை நடத்தி விட்டு, தன் சகோதரியின் மகளின் கலியாணத்தில் கலந்து கொண்டிருப்பார். அந்த கலியாணவீட்டிலும் அவர் தன் முன்இருக்கையின் மீது கால் வைத்து..... பட்டுவேட்டி சகிதம் தன்னை அறிமுகப்படுத்தியிருக்கக் கூடும் இந்த“மணியம்”இவரை நீங்கள் அடிக்கடி உங்கள் வாழ்வில் கண்டிருப்பீர்கள். வலியவந்து தங்களை அறிமுகம் செய்வார்கள் உங்கள் உரிமையின் மேல் கால் பதிப்பார்கள். ஒரு போலியான வாழ்வின் யதார்த்தங்களை உங்களுடன் பகிர்வது போல் நடிப்பார்கள்.

எனது தொடரில் இனி நான், Mr.Maniyam என்றால் உங்களுக்கு அவர் என்னCharacter என்பது புரிந்து விடும். இவர் ஒரு சுயநலத்தின் குறியீடு.

10000000 க்கும் மேற்பட்ட Maniyam கள் எம்மைச் சுற்றியிருக்கிறார்கள்.

அதேபோல அறியாமையாலும் வஞ்சகமின்மையாலும் ...... தாம் என்ன செய்கிறோம் என்று தெரியாத தோட்டத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள்.

நான் இத் தொடரில் அரசியல் பேசவே மாட்டேன் நீங்கள் வலிந்து கண்டுபிடித்தாலும் அது அரசியலாகாது எல்லாருக்கும் பிடிக்கிற விஷயம் எனக்குப் பிடிக்க வேண்டும் என்றில்லை.

* * * * * *

இன்றும் ஒரு புகைப்படத்துடன் உங்களைச் சந்திக்கிறேன் 13 வருடங்கள் பழைய புகைப்படம் இது இங்கே இருக்கும் சிறார்கள் Danish சிறார்கள் எனது தோலின் நிறத்தையும் மறந்து எனது தோளோடு தோள் நின்றார்கள். இவர்களுக்கு இப்போ 20-23 வயதிருக்கும் அப்போது இவர்கள் grade 3,4 படித்துக் கொண்டிந்தார்கள் நான் கூட மீசை வைத்து இளமையாய்..... (ஹீ.....ஹீ) Danish கல்விச் சட்டத்தின் படி 6 வயதில் தான் ஒரு சிறுவன்/சிறுமி பாடசாலைக்குப் போகமுடியும்.

* * * * * *

இவர்கள் தொடர்பான கதையை நான் இப்படி ஆரம்பிக்கிறேன். ‘‘Are you Mr.Adhavan? ” என்று கேட்டபடி எனது வாசற்கதவைத் தட்டினாள் ஒருவெள்ளைக்கார பெண்மணி.


“Yes. Please come in.what you want?” என்றேன் நான்.

“I heard about you. you Studied in interna tional Drama School. can you come to my School and Make a drama for my Students?” என்றாள் ‘ஆரப்பா இது ? இந்த விடியக்காலம வந்து தன்ர மாணவர்களுக்கு நாடகம் பழக்கட்டாம்” என்றுமுணுமுணுத்த படி..... அலுத்தபடி ..... தொலைபேசியில் இரகசியமாய் விபரம் அறிந்தால் அவாதானாம் அந்தப்பள்ளிக் கூடத்தின் அதிபர்.

அதிபரே என் வீடுதேடிவந்து தன் மாணவர்களுக்கு நாடகம் பழக்கிக் கொடு எனக் கேட்டது என் நெஞ்சில் ஏதோசெய்தது. “கட்டாயம் வருகிறேன்” எனச்சொன்னேன்.

* * * * * *

என்னைச் சுற்றிலும் வெள்ளை மழலைகள். நீலக் கண்களாய் ஒரு சிறுமி! பச்சைக் கண்களாய் இன்னொருத்தி! மண்ணிறத்தில் தலைமுடியும் பெருத்தவயிறுமாய் ஒருசிறுவன்! தன்னை விட்டவை இல்லை என்ற இறுமாப்புடன் கீழ்ச் சொண்டைக் கடித்தபடி இன்னொரு செல்லம்!



இப்படியாய் என்னை நிறைத்தன வெள்ளைத்தோல் மழலைப்பட்டாளம்.

அவர்களுக்கும் என்னைப் பிடித்துப் போயிற்று. எனக்கும் அவர்களைப் பிடித்துப் போயிற்று. பிறகென்ன கேட்கவா வேண்டும்? நாங்கள் அதிபருக்குத் தெரியாத மாதிரி நாடகம் பழகினோம். அந்த .School ஐயே ஒருஆட்டு ஆட்டினோம். அங்கேயுள்ள எல்லா வாத்திமாருக்கும் பட்டங்கள் வைத்தோம்.

‘சுக்குப்புக்கு ரயில் விளையாடினோம்’ ‘ஒளிச்சுப் பிடிச்சு விளையாடினோம்’ ‘சட்டையில்வைத்து ‘அப்பிள்’ கடித்துப் பகிர்ந்து கொண்டோம்’. ‘ குளிர்காலத்தில் ‘பனி உருண்டை’ செய்து ஒருவர்மேல் ஒருவர் எறிந்தோம்’ இப்படியே என்னில் அவர்களும் அவர்களில் நானும் கிலோ மீற்றர்கள் கடந்து, வயது கடந்து, மதம் கடந்து, தேசங்களின் எல்லை கடந்து எதிர்பார்ப்பில்லாத அன்பில் திளைத்தோம்.

இந்தப் புகைப்படத்தில் நீங்கள் யாராவது ஒரு சிறாரை அவநம்பிக்கையுடன் உள்ளார் எனச்சொல்ல முடியுமா? உண்மையும், புனிதமும், நம்பிக்கையும், பாசமும் அவர்கள் முகத்தில் தெரியவில்லையா?

* * * * * *

சரி நாடகம் போட்டாக வேண்டும். என்ன நாடகம்போடுவோம் எனக்கேட்டேன் ஏகப்பட்ட கருத்துக்கள் வந்தன.

எல்லோரும் கூடி ஒரு கருவைத் தேர்ந்தெடுத்தோம் எந்த விதமான பிரதிஉபகாரமும் இல்லாத ஒரு அன்புதான் கருவாக இருக்க வேண்டும் என அந்த மழலைகளும் நானும் உறுதியாக நின்றோம்.

அந்தக்கதை இதுதான்.

The giving tree (கொடுக்கும் மரம்) (இது ஒரு அமெரிக்க எழுத்தாளரின் கதை எனது நாடகத்திற்குப் பிறகு இது Shadow theatre வகையில் பிரபல்யம் பெற்று, இப்பொழுதும் நாடகவடிவில் Denmark grade 3,4 சிறார்களால் நடிக்கப்படுவதாய் அறிகிறேன். இது சித்திரதொடர்கதையாக எனது ஆருயிர் நண்பிமல்லீஸ்வரி ஆதவனால், தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ‘பாரீஸ் ஈழமுரசு’ பத்திரிகையில் தொடராகவெளி வந்ததுஎன்பதுகுறிப்பிடத்தக்கது.) ஒரு ஊரில் ஒரு அப்பிள் மரமும் ஒரு சிறுவனும் நண்பர்களாய் வாழ்ந்து வந்தனர். அப்பிள் மரத்தின் கிளைகளில் அவன் ஊஞ்சலாடுவான். அதனைத் தழுவுவான் களைப்புற்றால் அதன் நிழலில்உறங்குவான். அவன் உறங்குகையில் கூட தன் இலைகளினால் தாலாட்ட மறந்ததில்லை அந்த அப்பிள் மரம்.

ஒருநாள் தன் நண்பர்களுடன் படம பார்க்கப் போவதற்கு அந்த சிறுவனிடம் காசு இருக்கவில்லை அவன் தன் அப்பிள் மர நண்பனிடம் போனான் “ஏன் அழுகிறாய்?” என்றது மரம்அவன் விசயத்தைச் சொன்னான்.

“இதுக்குப்போய் ஆரும் அழுவார்களா நான்தானே உன்னில் அளவு கடந்த அன்பு வைத்திருக்கின்றேன். நிமிர்ந்து என்னைப் பார். எவ்வளவு அப்பிள்கள் என்னிடம் உண்டு எல்லாவற்றையும் பிடுங்கிச் சென்று சந்தையில் விற்று பணத்தைப்பெறு” என்றது. சிறுவனும் அவ்வாறே செய்து அன்றைய பொழுதை இன்பமாய் கழித்துவிட்டு வந்தான். தன் நண்பன் அப்பிள் மரத்தின் கீழேயே உறங்கினான். அப்பொழுதும்தன் அப்பிள் மரம் அவனைத் தாலாட்ட மறக்கவில்லை. காலம் உருண்டு ஓடியது சிறுவன் இயைஞனானான். இளைஞன் கவலையுடன் இருந்த ஒரு நாளில் அப்பிள் மரம் கேட்டது.

“ஏன் என்னவாயிற்று? என்னிடம் கூடச் சொல்லக்கூடாதா?” இளைஞன் சொன்னான்.

“எனக்கு ஒரு காதலி இருக்கிறாள். அவளுடன் ஊர் சுற்றிப் பார்க்கவேண்டும். அவளை என் மோட்டார் சைக்கிளின் பின் ஏற்றிக் கொண்டு போவேன் என அவளுக்கு உறுதியளித்து விட்டேன். என்னிடம் போதிய பணம் இல்லை”

“அட, இதற்குப்போய் யாரும் அழுவார்களா? நான்தானேஉன்னில் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறேன் நிமிர்ந்து என்னைப் பார். எவ்வளவு கிளைகள் இருக்கின்றன. அவற்றை வாளால் வெட்டு மரக்காலையில் அவற்றை விற்று பணமாக்கு” என்றது அப்பிள்மரம். இளைஞனும் அவ்வாறே செய்தான். தன்காதலியுடன் உல்லாசமாய் இருந்தான். அப்பிள் மரத்தடியில் உறங்கினான். அப்பொழுதும் அந்த அப்பிள் மரம் அவனைத் தாலாட்ட மறக்கவில்லை.

காலம் உருண்டு கொண்டே போனது. சிறுவன் இளைஞனாகி.... இளைஞன் குடியானவன் ஆனான். ஒரு நாள் குடியானவன் ‘சேவ்’ எடுக்காமல் குழம்பிய தலையுடன் எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருந்தான். அடிக்கடி தன்நகங்களைக் கடித்தான். நிலத்தில் படங்களைக் கீறி அழித்தான். அவனது விரக்தியைக் கண்ட அவன் நண்பன் அப்பிள் மரம் கேட்டது.

“ என்ன நடந்தது? ஏன் நீ இப்படி விரக்தியின் விளிம்பில் தள் ளாடுகிறாய்? எனக்குச் சொல் லக்கூடாதா?” அவன் சொன்னான்......

‘‘ அன்பு நண்பனே.... எனது மனைவிஅடிக்கடிஎன்னை நைச்சரிக் கிறாள். பக்கத்து வீட்டு ‘மணியம்’ போல நீயும் வெளிநாடு போகலாந் தானே...! அங் கிருந்து என்னைக் காப்பாற்று நீ இங்கிருந்து என்ன செய்யப் போகிறாய்? நீ எனக்கு காசு அனுப்பு, நான் காணி வாங்குகிறேன் வீடு கட்டுகிறேன்...எங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கிறேன். எங்கள் குடும்பம் சிறக்குமல்லவா...?’’ கலங்கியபடியே சிறுவன்-இளைஞன்-குடியானவன் இதைத்தன் அன்பு அப்பிள்மரநண்பனிடம் கூறிக் கொண்டிருந்தான்.

அப்பிள் மர நண்பனுக்கு இதயத்தில் வலி எடுத்தது.

“அட, இதற்குப் போய் யாரும் அழுவார்களா? என்னிடம் சொல்லக்கூடாதா? நான்தான் உன்னில் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறேன். நிமிர்ந்து பார் என்னிடம் இப்போது இருப்பது என் அடிமரத்தண்டுதான் அதையும் வெட்டு. என் தடித்த அடி மரத்தண்டில் ஒரு கட்டுமரம் செய் இந்த நாட்டைக் கடந்துபோ! திரைகடலைத் தாண்டு! திரவியம் தேடு!’’ என்று சொன்னது.

அந்த சிறுவன்- இளைஞன்- குடியானவன் அவ்வாறே செய்தான். ஒரு அழகிய கட்டு மரம் செய்து நாட்டைக் கடந்து போனான். சிறுவன்- இளைஞன்- குடியானவன்- கிழவன்.

கிழவன் தன் ஆருயிர் நண்பன் அப்பிள் மரத்தை தேடிப்போனான். அப்பிள் மர நண்பனோ-பழங்கள், கிளைகள், அடித்தண்டு எல்லாம் இழந்து போய் ஒரு குற்றியாய் இருந்தது. அந்தக் குற்றிகேட்டது.

“ ஏன் நீ கவலையுடன் இருக்கிறாய்? என்னிடம் கூடச்சொல்லக்கூடாதா? நான்தானே உன்னில் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறேன். என் குற்றிபோல் இருக்கும் இருக்கை அதன் மீது அமர்ந்துகொள் நான் இறக்கும் வரை உன் நண்பன் ஆறுதல் கொள் என் கனிகளும், கிளைகளும், அடித்தண்டும்....!ம்....! இப்போது கூட நீ அமர்வதற்கு....ஆறுதல் கொள்வதற்கு என்மடி தருகிறேன். நண்பனே .... இதற்குப் போய் யாரும் அழுவார்களா....?”

கிழவன் பெருமூச்சு விட்டான் அந்தத் தூய நட்பில் உயிர் கலந்து....ஓவியம் செய்து...... பல்லாயிரக்கணக்கான சுயநல ‘மணியம்’ களிடமிருந்து.... விடுபட்டு எதிர்பார்ப்பிலா-அன்பினில்-ஆண்டுகள் ஆயிரம் வாழ்ந்திருந்தான் ..................... (அடுத்த புதனில்)

## வவுனியாவில் இனந் தெரியாதோரால் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் குடும்பஸ்தர் ஒருவர் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வவுனியா பட்டக்காடு வீதி கணேசபுரம் பகுதியில் கடந்த ஞாயிறு இரவு 7.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போதே இனந்தெரியாதவர்களினால் சுடப்பட்டுள்ளார். இறந்தவர் புதிய மணிப்புரம் என்ற இடத்தைச் சேர்ந்த 0 வயதான கே.தேவராஜ் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. ரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இடம்பெற்றுள்ள 15 ஆவது கொலைச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.இறந்தவரின் சடலம் வவுனியா பொது மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகப் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.விஜயநாயக்க தெரிவித்தார். (21)

## சூழல் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு புதுக்குடியிருப்பில் சிறப்பு ஆய்வரங்கம்

(முல்லைத்தீவு)

சூழல் பாதுகாப்புத் தொடர்பான ஆய்வரங்கம் புதுக்குடியிருப்பு தமிழர்புனர்வாழ் வுக்கழக கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் சுற்றுச்சூழல் உத்தியோகத்தர் கருணைவேல் தலைமையில் இடம்பெற்றது.மங்கல விளக்கினை முல்லை. மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன் புதுக்குடியிருப்பு பிரதேசசபைச் செயலாளர் யேசுதாசன் ஆகியோர் ஏற்றினார்கள்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழர்புனர்வாழ்வுக் கழக மாவட்ட துணைப்பொறுப்பாளர் திருமதி கோமதி ஏற்றினார்.சிறப்புக் கருத்துரையினை உதவிவிவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் நிகழ்த்தினார்.

ஆய்வுரைகளை த.பொ.மே.நிறுவனமாவட்ட இணைப்பாளர் அமிர்தலிங்கம்,புதுக்குடியிருப்பு பிரதேசசபைச் செயலாளர் யேசுதாசன்,சுற்றுச் சூழல் உததியோகத்தர் கருணைவேல் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.தொடர்ந்து சுற்றுச்சூழல் தொடர்பான கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதையினை முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவி வாசித்தார்.சுற்றுசூழல் தொடர்பான துண்டுப்பிரசுரம் விநியோகத்தைத் தொடர்ந்து நன்றியுரையினை முல்லை. பொருளாதார அபிளவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுரேஸ் நிகழ்த்தினார். (20)

**21**
அரச தரப்பினர் பாராளுமன்றத்தில் புரிந்துவரும் பயங்கரவாதச்செயல்கள் மற்றும் அராஜகங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 114 எம்பிக்கள் ஒப்பமிட்ட மகஜர் சபாநாய கரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தாக்கப்பட்டமைக்கு பிரதமர் ,புத்தசாசன அமைச்சர் மன்னிப்புக்கோர வேண்டுமென ஐந்து பிக்குகள் கொழும்பு புறக் கோட்டையில் உண்ணாவிரதம்.

**22**
கொழும்பு கலவானயில் ஐ.ம.சு.முன்னணி கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கிளைத்தலை வர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்த னர்.

**23**
சிறிலங்கா அரசு கண்ணிவெடிகள் ஒழிப்பு ஒப்பந்தமான 'தட்டோவர்' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டுமென்பதை வலியுறுத்தியும், இவ் ஒப்பந்தத்தில் இது வரை காலமும் சிறிலங்கா அரசாங்கம் கைச்சாத்திடாமையைக் கண்டித்தும் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற் றப் பட்ட கருணாவிற்கு உதவினார் என்ற சர்ச்சையில் சிக்கிய ஐ.தே.க பாராளுமன்ற தேசியப்பட்டியல் எம்.பியான அலிசாஹிர் மௌலானா எம்.பி. பதவியை இராஜினா மாச் செய்தார்.


போலி, ஆவணங்கள் சான்றிதழ்களைத் தயாரித்து வழங்கிவந்தவர் என்று கூறப்படும் மோசடிப் பேர்வழியின் போலி ஆவணத் தயாரிப்பிடம் யாழ்.இல் முற்றுகை.

மிதிவெடி அகற்றும் நிறுவனமான ஹலோரஸ் தன் வாகனத்தரிப்பிடத்திற்குள் நுழைந்த இனந்தெரியாத குழுவினால் நான்கு வாகனங்கள் முற்றாக தீயிட்டு அழிக்கப் பட்டன. பல வாகனங்கள் சேதமாக்கப்பட் டன.



வாகனங்கள் தீக்கிரை




**24** அளம்பில் தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.


2 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில்

கொழும்பு புறக்கோட்டை நான்காம் குறுக்குத்தெருவில் நான்கு மாடிக் கடையொன்று இடிந்து வீழ்ந்ததில் இடிபாடுகளுக்கிடையில் சிக்கி மூவர் பலி.


மாடிக்கட்டடம் அழிவு

மட்டு -கல்முனை வீதி களுவாஞ்சிக்குடியில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகம் மீது கைக்குண்டுவீச்சு இடம்பெற்றது.

**25**
திருகோணமலை மகிந்தபுர சோதனைச் சாவடியில் தமிழீழ காவல்துறை உறுப்பினர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு-பொரளையில் உள்ள அச்சகத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் பெருமளவான பொருட்கள் அழிவு.


அச்சகத்தில் தீ விபத்து

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த சிங்கப்பூர் பிரதமர்கோகொக்டொங் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து உரையாடினார்.

**27**
விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் மூதூர் பிரதேச முஸ்லிம் பிரதிநிதிகளும் சந்தித்து தமிழ்முஸ்லிம் உறவுகள் பலப்படுத்துதல் தொடர்பாக கலந்துரையாடினர்.

ஐந்து நாடுகள் பங்கேற்ற ஐக்கிய நாடுகள் சமாதான உதவி நடவடிக்கைத் திட்டத்திற்கான பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகைப் பயிற்சி நிறைவு நிகழ்வு இரத்தினபுரி மாவட்டத்தில் குங்குலேக ங்கவில். இடம்பெற்றது.

# பூநகரி பிரதேச சபையின் அனுமதியுடன் கம வாய்க்கால்களில் மண் அகழ்வு

## -உடன் தடுத்து நிறுத்தக் கோரிக்கை

வேரவில் கமவாய்க்கால்களில் மணல் அகழ்வதை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறும் தமக்கு இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்க ளுக்கு இழப்பீட்டைப் பெற்றுத்தரு மாறும் வேரவில் கமக்காரர் அமைப்பு, முழங்காவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் என். சுந்தரமூர்த்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேரவில் வயலில் இருந்து கட லில் நீர்பாயும் வாய்க்காலில் மாரிப் பிரிந்தான் எனப்படும் பகுதியில் உள்ள இரண்டு வாய்க்காலிலும் அதன் இருபக்கங்களிலும் பெரு மளவில் மணல் தொடர்ந்து ஏற் றப்பட்டு வருகிறது. மணல் ஏற்றுவதற்குரிய அனுமதி பூநகரி பிரதேச சபையினால் வழங்கப் படுவதுடன் பணமும் பெறப்படு கிறது. பற்றுச்சீட்டிலும் வேரவில் என்று குறிப்பிடப்படுகிறது. பிரதேச சபையின் அனுமதி பெற்று பலரும் மணல் ஏற்றுகின்றனர் . பிரதேச சபைக்குச்சொந்தமான உழவு இயந்திரமும் மணல் ஏற்றிவருவது. குறிப்பிடத்தக்கது.

மேலும் மணல் ஏற்றுபவர்கள் வாய்க்காலில் குறுக்கே அணை யாக மணல் போட்டு நீர்பாயாத வாறு தடை செய்துள்ளனர். குறித்த மாரிப்பிரிந்தான் பகுதி யிலிருந்து பிரியும் இரண்டு வாய்க் கால்களும் ஆழமாகவும், சுமார் 50 அடி அகலமாகவும் வெட்டப்படுகிறது. தற்போது மணல் ஏற்றப்படுமிடத்திற்கு அண்மை யாக கடல் நீர் மாரிகாலத்தில்வருவதுடன் எனவே மேட்டுப்பகுதியில் மணல் வெட்டி அள்ளப்படுவதால் கடல் நீர்எமது குளத்திற்கு வரவாய்ப் புள்ளது.

மணல் ஏற்றுவதைத் தடை செய்வதுடன் எமது வாய்க்கால் அழிக்கப்பட்டமைக்கானதும் இது வரையில்மணல் அள்ளப் பட்டதால் ஏற்பட்டசேதத்திற் காகிய பெறுமதியையும் பெற்றுத்தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

# தூயதமிழில் பெயர் சூட்டிய 65 பெற்றோர்கள் கௌரவிப்பு

(திருகோணமலை)

உலகெங்கும் தமிழ்வாழ வேண்டும் என்ற பெருவிருப்பில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தூய தமிழில் பெயர் சூட்டுவோருக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கும் செயற்றிட்டத்தில் கனடாவில் உள்ள ஈழத்தமிழர்களால் நடத்தப்பட்டு வரும் 'சிலம்பம்' அமைப்பு கடந்த ஞாயிறு மாலை திருகோணமலை சென்யோசப் கல்லூரி மண்டபத்தில் தெரிவு செய்யப்பட்ட 65 பெற்றோர்களை கௌரவித்தது.

இந்நிகழ்வுக்கு விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமைவகித்தார். சிறப்புரையை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் நிகழ்த்தினார். பரிசளிப்பு உரையை பாராளுமன்ற உறுப்பினர் க.துரை ரெட்ணசிங்கம் நிகழ்த்தினார். மாவட்டக்கல்விக்கழகப் பொறுப்பா ளர் கவியன்பன், குறளமுதம் விநாயகசோதி,சேவைக்கால ஆலோசகர் திருமதி ராணிசீதரன், மாகாணப்பண்பாட்டுத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி ஆகியோர் உரையாற் றினர் சிலம்பம் தாயகக்கிளை இந்நிகழ்வை நடத்தியது. (25)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஆறு வீதிகள் புனரமைப்பு

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலரின் மேற்பார்வையின்கீழ் ஆறு வீதிகள் மனிதவலு மூலம் துரிதமாகப் புனரமைத்து திருத்தப்பட்டு வருகிறது.

பரந்தன் 1/4 ஏக்கர் திட்டத்தில் 3 ஆம் ஒழுங்கையும் முதலாம் கட்டை நாகதம்பிரான் ஆலய வீதி,முரசுமோட்டை பழையகமம் வீதி, கல்மடு நகர் பஸ்நிலையத்திருந்து நீர்ப்பாசன வாய்க்கால் வரையான 7 ஆம் யுனிற் வீதி, சுண்டிக்குளத்திலிருந்து புன்னைநீராவி செல்லும் வீதி ஆகிய ஆறு வீதிகளுமே புனரமைக்கப்பட்டு வருவதாக பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இரா. பற்பநாதன் தெரிவித்தார்.(14)

# சமூக பொருளாதார அபிவிருத்தி சேமிப்புக் கணக்கு ஆரம்பம்

(உடையார்கட்டு)

சமூக பொருளாதார அபிவிருத் திக் குழுக்களுக்கான சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பு வைபவம் கடந்த வியாழனன்று 5.00மணிக்கு ச.பொ.வ.நிறுவன இணைப்பாளர், சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி விசுவமடு கிளைமுகாமை யாளர், உ.தெற்கு கிராம அலு வலர், சுதந்திரபுரம்கிராமஅலுவலா, கிராமப்பொறுப்பாளர்கள் மற்றும் பொதுநலன் விரும்பிகள் முன்னிலையில் இடம்பெற்றது.

மக்கள் எதிர்கொள்ளும் அவசர தேவைகளைக் கருத்திற்கொண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு ச.பொ.அ.குழுக்களை வலுப்படுத் தும் நோக்கில் இச்சேமிப்புக் கணக்குத் தொடக்கிவைக்கப் பட்டது. இச் சேமிப்புக் கணக்கு ச.பொ.வ.நிறுவனத்தின் ஆளு கைக்குட்பட்ட ஒன்பது கிராமங் களின் பதினாறு ச.பொ.அபிவி ருத்திக் குழுக்களுக்கு ஆரம்பிக்கப் பட்டு சேமிப்புக் கையேடு ஏடும் ச.பொ.அ.வங்கிமுகாமையாளர் மதனால் வழங்கப்பட்டது. (19)

# முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு வதிவிடப்பயிற்சி

முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் போறூட் நிறுவனமும் இணைந்து இதுவரை பயிற்சி பெறாத முன்பள்ளி பிரதேச இணைப் பாளர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறியினை மேற்கொண் டது.

மட்டக்களப்பு சத்துருக்கொண் டான் சர்வோதயா பயிற்சி நிலை யத்தில் இம் மாதம் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இடம் பெற்றது.

இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த 23 பிரதேச இணைப் பாளர்களும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பிரதேச இணைப்பா ளரும், வவுனியாவைச் சேர்ந்த இரண்டு பிரதேச இணைப்பாளர்க ளும் பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சித் தொடர் பயிற்சி யின் 1ஆம் கட்டம் பூர்த்தியடைந்துள் ளது. இங்கு குழந்தை உளவியல், குழந்தைகளுக்கான சுகாதாரம், ஆக்கத்திறன், அழகியல் திறன், கணிதமொழி விருத்தி செயற் பாடுகள் போன்றவைகளுக்கான விளக்கங்களுடன் விரிவுரைகள் இடம்பெற்றன.

# மலசலகூடம் அமைக்க சர்வோதயம் முன்வருகை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் எவ்வித அடிப்படைவசதிகளுமின்றி இருக்கும் குடும்பங்களை இனங் கண்டு அக்குடும்பங்களுக்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க மன்னார் சர்வோதய இயக்கம் முன்வந்துள்ளது.

இதற்கென மன்னார் சர்வோதய இயக்கம் சாவற்காடு, பெரியகடை, காஞ்சிபுரம் போன்ற வறுமையான கிராமங்களில் தமது நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி இலவச மாக மலசல கூடங்களை அமைக் கவுள்ளது. இதனடிப்படையில் முதற்கட்டமாக சாவற்காட்டுப்பகு தியில் தமது பணியை ஆரம்பிக்க வுள்ளது.

இதற்கான பூர்வாங்க வேலை களை மன்னார் சர்வோதய இயக் கத்தின் வெளிக்கள உத்தியோகத் தர் ஒழுங்கு செய்துள்ளார். (மி)

# மடு அன்னையின் ஆடித் திருவிழா

(மன்னார்)

தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆடி மடுமாதா திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு ஆயர்களின் கூட்டுத்திருப்ப லியுடன் நிறைவு பெறும்தற்சமயம் இருபத்தைந்தாயிரத்திற்கும் ஐம்பதாயிரத் திற்கும் உட்பட்ட பக்தர்கள் திரண்டுள்ளனர்.இம்முறை இரண்டு இலட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பகுதியில் கடுமையான காற்றும்வெப்பமும் உள்ளதால் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கிய போதிலும் அங்கு நீர்வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து வசதி என்பன மிகவும் சிறப்பாக உள்ளன.முன்னர் தெரிவித்ததன் பிரகாரம் இன்று தொடக்கம் எதிர்வரும் 3ஆம் திகதி வரை மடு வீதிப்பாதை திறந்துவைக்கப்பட்டிருக்கும். (மி)

## ஒன்றுகூடல்

(உடையார்கட்டு)

விசுவமடு பாரதி வித்தியாலயத் தில் 23.6.2004 நான்கு மணிக்கு விசுவமடுப்பிரதேச பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் றொபேட் தலைமையில் கமக்கார அமைப்பிற்கான மாதாந்த ஒன்று கூடல் இடம்பெற்றது.

இவ்வொன்று கூடலில் கமக் கார அமைப்பினருடன் தே.எ.பேரவை யினர் கலந்துகொண்டு சிறப்பித்து விவசாயிகளின் பிரச்சினைகள் ஆராயப்பட்டன. நிகழ்விற்கான சிறப்புரையை விசுவமடுப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் வழங்கினார். (19)

# குளவிகொட்டியதால் 15 மாணவர் பாதிப்பு

(கொழும்பு)

குளவிகள் கொட்டியதில் 15 மாணவர்கள் பாதிக்கப்பட்ட சம்பவம் மஸ்கெலியவில் இடம் பெற்றுள்ளது.

மஸ்கெலிய சமனெலிஸ மகாவித்தியாலய மாணவர்கள் சென்ற வியாழன் காலை மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது குளவிகளால் தாக்கப்பட்டு பாதிப்படைந்துள்ளனர்.

இச் சம்பவம் நடைபெற்ற போது நான்கு ஆசிரியர்கள் மட்டுமே அங்கு இருந்ததாகவும் அதிபர் உட்பட 14 பேர் வெளியில் சென்று விட்டதாகவும் ஹற்றன் வலயக் கல்விப் பணிமனை கூறியுள்ளது.

# பேருந்து மிதி பலகையில் பயணம் செய்வது தடை!

(கொழும்பு)

பேருந்து மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்வதைத் தடை செய்வதென சிறிலங்காவின் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வரும் யூலை முதலாம் திகதி தொடக்கம் இத்தடை நடைமுறைப் படுத்தப்படும் எனவும் மீறுவோர் மீது தண்டப்பணம் விதிக்கப்படும் என்றும் சிறிலங்காவின் போக்குவரத்து பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

பேருந்துகளில் உயர்சத்தம் கொண்ட 'ஹோர்ன்'களையும், சாரதிகள் செருப்புகள் அணிந்து கொண்டு வாகனம் செலுத்துவதையும் தடைசெய்வதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நிபந்தனைகளின் அடிப்படையில் அரசிற்கு ஆதரவளிக்க ஹெல உறுமய முடிவு

## ஆளும் தரப்பில் கடும் அதிருப்தி

**நிபந்தனைகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு ஜாதிக ஹெல உறுமய உறுதியளித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.**

ஜாதிக ஹெல உறுமயவுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் ஜாதிக ஹெல உறுமயவின் உயர்பீடத்தை அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தாக்கப்பட்டமைக்கு அரசாங்கம் மன்னிப்புக் கோருமாக இருந்தால், நிபந்தனைகளின் அடிப்படையில் அரசாங்கத்துக்கான ஆதரவை வழங்குவதற்கு தயாராக விருப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பின் போது, அரச ஊடகங்களில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு எதிரான பிரச்சாரங்கள் இனிமேல் மேற்கொள்ளப்படமாட்டாதென ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஜாதிக ஹெல உறுமயவிடம் உறுதியளித்தாகவும் தெரிய வருகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு, அதன் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி. பெரும் தடையாக இருப்பதையும் ஜாதிக ஹெல உறுமய மங்கள சமரவீரவிடம் சுட்டிக்காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தஇணக்கப்பாட்டினை அடுத்து, பாராளுமன்றத்தில் தமது உறுப்பினர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிராகத் தென்னிலங்கையில் நடத்தப்படவிருந்த அரசாங்கத்துக்கு எதிரான கண்டனப் பேரணிகள் மற்றும் சத்தியாக்கிரகப் போராட்டங்களை வாகனப் பேரணியாக மாற்றியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இப்பேரணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிரான சுலோகங்களுக்குப் பதிலாக பொதுச்சுலோகங்களை பாவிப்பதென ஜாதிக ஹெல உறுமய முடிவெடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவுடனான மங்கள சமரவீரவின் இந்தச் சமரச முயற்சிகள் குறித்து ஐக்கிய மககள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவர்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்துடனான இந்தச் சமரச முயற்சி மூலம் தனது கட்சியின் உட்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவதற்கு ஜாதிக ஹெல உறுமய முனைவதாகவும் அவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

### ஐ.தே.கவுக்கு ஆதரவு

(கொழும்பு)

அடுத்தமாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கப்போவதாக இலங்கை முஸ்லிம் லீக் தீர்மானித்துள்ளது.

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற லீக்கின் கூட்டமொன்றில் இத் தீர்மானம் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டதாக அதன் செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது.

# கட்சிகளிடையிலான கருத்து வேறுபாடே நாட்டின் அபிவிருத்தியின்மைக்குக் காரணம்

*சபாநாயகர் லொக்குபண்டார*

(கொழும்பு)

நாடு சுதந்திரம் பெற்று பலதசாப்தங்கள் முடிவுற்றும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி அடையாமல் விட்டதற்குக் காரணம் அரசியல் கட்சிகளின் கருத்து வேறுபாடே என சபாநாயகர்லொக்கு பண்டார தெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடந்த 44ஆவது நூலக ஆண்டுவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

திறந்த மனத்துடன் நாம் சிந்திப்போமாயின் எந்த அரசியல்கட்சியிலும் நல்ல அபிப்பிராயங்கள் காணப்படும். மதிப்புமிக்க தலைவர்கள் காணப்படுவர்.

நாம் வெளிநாட்டுப் பொருட்களுக்கு அடிமையாகிறோம். வெளிநாட்டு மொழிகளுக்கு நாம் அடிமையாக வேண்டியதில்லை. வாசிப்பதால் எந்த சவாலையும் ஏற்கக்கூடிய சக்தி பிறக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## மனிதவள மேம்பாட்டுப் பகுதி

### கணக்கியல், கணக்காய்வு பயிற்சி நெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரும் கணக்கியல், கணக்காய்வு பயிற்சிநெறிகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

01. கல்வித்தகைமை:- க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. அகவை :-16 தொடக்கம் 21 வரை

**குறிப்பு :-**

01. விண்ணப்ப முடிவு நாள்:- 05.07.2004.
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:- 07.07.2004. அன்று காலை 9.00மணிக்கு
03. நேர்முகத் தேர்வுநடைபெறும் இடம்:- மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நிதித்துறை நாகதம்பிரான் வீதி,கிளிநொச்சி.
04. நேர்முகத்தேர்வுக்கு வருகைதருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ்களோடு வருக.
05. பயிற்சிக் காலத்தில் தங்குமிடம், கல்விச்செலவு, உணவுவசதி இலவசமாக வழங்கப்படும்.
06. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-
    பொறுப்பாளர்,
    மனிதவளமேம்பாட்டுப் பகுதி,
    நிதித்துறை,
    நாகதம்பிரான் வீதி,கிளிநொச்சி.
07. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்.

(சி.9739)

ஆளுகை,
மனிதவளமேம்பாட்டுப் பகுதி.



## சேவை நலன்பாராட்டு



செல்வி.
பார்வதி வடிவேலு

ஆசிரியர்
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

மு/புதுக்குடியிருப்பு ம.வி.யில் சேவைக்காலம் 1996-2004.06.30

*கனிந்து விட்ட கண்ணியமானசேவை புதுக்குடியிருப்பு ம.வி.யில் நல்லாசானாக நாடு போற்ற நற்சேவை புரிந்து புனிதமான தன்பணியில் இருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் செல்வி. பார்வதி வடிவேலு அவர்களின் உத்தமமான பணியை என்றும் நாம் மறந்து விடமுடியாது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் அவர்கலங்கரை விளக்காகவும், அன்பிலும் பண்பிலும், அன்னை திரேசாவை ஒத்தவராகவும் ஈகையிலும், ஈகத்திலும் இமயத்தைவிட உயர்ந்தவராகவும், கடமையிலும் கண்ணியத்திலும் கண்கண்ட தெய்வமாகவும் விளங்கி மாணவர், ஆசிரியர் அதிபர், அனைவருக்கும் வழிகாட்டியாகவும் வாழ்ந்துகாட்டியவர்.இவருடையஓய்வுகாலம் ஒளிமயமானதாகவும், வளமானதாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அதிபர்,
ஆசிரியர்கள்,
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

(சி-9135)



## காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்

## பணிநிலை வெற்றிடம்

பணிநிலை 01. மொழி பெயர்ப்பாளர்:-
ஆங்கிலம் → தமிழ் - 03
ஜேர்மனி → தமிழ் - 01

பணிநிலை 02. மின் ஒட்டுனர்:- [வெல்டர்] - 01

பணிநிலை 03. மருத்துவ உதவியாளர்:- 02

பணிநிலை 04. சாரதி:- 02

பணிநிலை 05. தமிழ் ஆசிரியர்:- 01

[ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை]

பணிநிலை 06. இலத்திரனியலாளர்கள்:- 05

பணிநிலை 07. கடலகவளவாளர்கள்:- 05

க.பொ.த.[சா/த] கல்வித்தகைமையும்
அதற்கு மேற்பட்ட கல்வித்தகைமையுடையோரும்

குறிப்பு:- நேர்முகத்தேர்வு 02.07.2004 (வெள்ளி) காலை 9.00
இடம்:- காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர்இல்லம்.
கைவேலி, புதுக்குடியிருப்பு.
தகைமைச்சான்றிதழ்களுடன் மேற்குறித்த நாளில் சமுகமளிக்கவும்.

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை.

(4755)

# இந்தியா– பாக், "சிம்லா" ஒப்பந்தத்தின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இணக்கம்

## இந்திய,பாக். – வெளியுறவுத்துறை செயலர்மட்டப் பேச்சில் முடிவு

(புதுடில்லி)

**காஷ்மீர் பிரச்சினைக்கு சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணுவது என்றும் அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தையை வரும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடத்துவது என்றும் இந்திய,பாகிஸ்தானிய வெளியுறவுத்துறை செயலாளர்கள் முடிவு செய்துள்ளனர்.**

ஜம்முகாஷ்மீர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அமைதித் தீர்வு காண்பதற்கே தொடர்ந்தும் தீவிர பேச்சுவார்த்தை நடத்துவதென்று இந்தியாவும் பாகிஸ்தானும் முடிவு செய்துள்ளன.

இவை மீண்டும் தமக்கிடை யிலான பேச்சுவார்த்தைகளை ஜூலை, ஆகஸ்ட் மாதமளவில் நடத்தவுள்ளன.

புதுடில்லியில் கடந்த இரண்டு நாட்களாக இந்திய பாகிஸ்தான் வெளியுறவு மட்டப் பேச்சுக்கள் நடைபெற்றன. இதன் போதே இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய பாகிஸ்தான் பேச்சுக்களின் முடிவில் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டது. இதனை செய்தியாளர்களிடம் வெளியிட்டுப் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சகத்தின்செய்தித்தொடர்பாளர் நௌபேச் சர்மா, இதன் முக்கியஅம்சங்களை செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

காஷ்மீர் தொடர்பாக போக்குவரத்துத் தொடர்புகள்,வர்த்தகம், கலாச்சார ஒத்துழைப்பு, சுற்றுலா, சுற்றுப்புறச்சூழல் தொடர்பான குறிப்பான யோசனைகள் என்பனபற்றி புதுடில்லி முதன் முறையாக இஸ்லாமாபாத்திடம் வழங்கியுள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் கராச்சி, மும்பை ஆகிய இடங்களில் மீண்டும் தூதரக அலுவலகங்களைத் திறப்பது, உயரதிகாரிகளின் அலுவலகங்களில் ஊழியர்களின் எண்ணிக்கையினை 110 ஆக உயர்த்துதல், இருநாடுகளினதும் ஏவுகணைப்பரிசோதனைகளை நடத்தும்போது பரஸ்பரம் முன்னறிவிப்புச் செய்தல், இருநாடுகளின் சிறைகளிலுமுள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டிருக் கின்றன.

சிம்லா ஒப்பந்த அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இரு நாடுகளும் ஒபபுக்கொண்டுள்ளன. இதே வேளை அமைதிப்பேச்சு வார்த்தைக்கான இலக்கை நோக்கி இந்தியாவும்-பாகிஸ்தானும் வேகமாகச் சென்றுகொண்டிருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

ஆசிய ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா சென்றுள்ள நட்வர்சிங் அங்கு பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்குஸ்ட் முகமது கசூரியைச் சந்தித்துப்பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் தொலைக்காட்சிக் குப்பேட்டியளித்த நட்வர் சிங் அமைதிப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை நோக்கி இந்தியாவும் பாகிஸ்தானும் விரைந்து முன்னேறி வரவதாகவும் இந்த இலக்கை எட்டுவதற்கு இருநாடுகளுக்குமிடையே பெரியளவு கஷ்ரங்கள் இல்லை என்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

### நிலைமை குறித்து ஆராய்வு

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தற்போதைய நிலைமை. எல்லையில் நிலவும் சூழ்நிலை என்பன குறித்து பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு முதன்முதலாக நேற்று முன்தினம் விரிவாக விவாதித்துள்ளது.


## பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் மாநில முதலமைச்சர்களுக்குக் கூட்டம்

(புதுடில்லி)

உள்ளூராட்சி நிர்வாகம், கிராம வளர்ச்சித் தொடர்பாக மாநில முதலமைச்சர்களுக்கான கூட்டம் நேற்று புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்றுள்ளது.

வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்புக்களைப் பெருக்குதல், ஒட்டுமொத்த கிராம வளர்ச்சி என்பன குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளன. இதேவேளை மாநில மின்துறை அமைச்சர்களின் ஒரு நாள் மாநாடும் நேற்று புதுடில்லியில் நடைபெற்றுள்ளது.மத்திய மரபு சாரா எரிபொருள் அமைச்சர்கள் ஏற்பாடு செய்த இந்த மாநாட்டில், எரிபொருள்வள அமைச்சர் விலாஸ் முத்தன்பார் தொடக்கி வைத்துள்ளார்.

தொலைதூர கிராமப்புறங்களில் வாழும் அனைத்து மக்களுக்கும் மின் வசதி அளிப்பதற்கு ஏற்ப மின்சார உற்பத்தியை அதிகரிப்பது நகர்ப்புறங்களில் தொழிற்சாலைகள், வர்த்தகம் என்பவற்றை மேம்படுத்தல் என்பன இந்த மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளன.




பேச்சுவார்த்தை நடத்த புதுடில்லிக்குச் சென்ற பாகிஸ்தான் வெளியுறவுத்துறைச் செயலாளர் ரியாஸ்கோகார் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியபோது.

### பேச்சின் விபரம் குறித்து முஷாரப்பிற்கு விபரிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடன் வெளியுறவு மட்டத்தில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விபரத்தை பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிற்கு அந்நாட்டின் வெளியுறவு அமைச்சரும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்ட வருமானறியாத்றொக்கர் நேற்று விபரித்துள்ளார்.

அத்துடன் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.பர்ஷே் முஷாரப்பிற்கு கொடுத்துள்ள கடிதத்தையும் றொக்கர் அவரிடம் கையளித்துள்ளார்.



வேலை இழந்த ஆசிரியர்கள் மீண்டும் வேலை வழங்கக் கோரி சென்னையில் போயிஸ் தோட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா வின் வீட்டினருகே போராட்டம் நடத்துகின்றனர்.

## மும்பை பங்குச் சந்தையைத் தகர்க்கும் முயற்சி காஷ்மீர் பொலிசாரால் முறியடிப்பு

### -20 தற்கொலைப் படைத்தீவிரவாதிகள் கைதென அறிவிப்பு

(புதுடில்லி)

மும்பை பங்குச் சந்தையைத் தகர்க்கும் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது. என்றும், வெடிகுண்டுகளுடன் ஊடுருவிய 20 தற்கொலைப் படைத் தீவிரவாதிகளை நேற்று கைது செய்துள்ளதாகவும் காஷ்மீர் பொலிஸ் கூறியுள்ளனர்.

இந்திய பொருளாதாரத்தைச் சீர் குலைக்க பல்வேறுதிட்டங்களை தீட்டிவரும் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளின் அமைப்பான லஸ்கரிய தொய்ஷா, மும்பைப் பங்குச் சந்தையை தகர்க்க திட்டமிட்டுள்ளதாகவும் இதற்காக அந்த அமைப்பின் தற்கொலைத் தீவிரவாதிகள் காஷ்மீர் பாதையூடாக இந்தியாவுக்குள் ஊடுருவி இருப்பதாகவும் இந்தியா உளவுப் படையினருக்கு தகவல் கிடைத்ததையடுத்தே காஷ்மீர் பொலிசார் தேடுதல் நடத்தியதில் ஸ்ரீநகர் அருகே இவர்கள் பதுங்கியிருந்தவேளை கைதுசெய்துள்ளதாக காஷ்மீர் பொலிசார் கூறியுள்ளனர்.

இந்தத் தீவிரவாதிகளுக்கும் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை கொலைசெய்வதற்கு முயற்சி செய்தவர்களான சுட்டுக் கொல்லப்பட்ட 4 பேருக்கு தொடர்புள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக காஷ்மீர் பொலிசார் கூறியுள்ளனர். அத்துடன் காஷ்மீர் விஜபி முகமது அஜித் சூரியத் அமைப்பின் தலைவர் உமர் பாரூக்கின் உறவினரின் கொலைகளுக்கும் இந்த தீவிரவாதிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாக உறுதிசெய்யப் பட்டுள்ளதென்றும் காஷ்மீர் பொலிசார் கூறியுள்ளனர்.

## உயிரைக் கொடுத்தாகினும் நாட்டின் மனிதத்தன்மையை அரியணை ஏற்றுவோம்

### ஜாதிக ஹெல உறுமயவின் பா.உறுப்பினர் சவால்

(கொழும்பு)

உயிரைக்கொடுத்தேனும் நாட்டின் சட்டம், நீதி மற்றும் மனிதத் தன்மைகளை அரியணை ஏற்ற வேண்டும்.இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் கொலனாவே சிறி சுமங்கல தேரர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

தர்ம இராஜ்யத்தை உருவாக்கும் வரை தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமய ஏற்பாடு செய்திருந்த யாத்திரை நிகழ்வில் கலந்து கொண்ட சிறிசுமங்கல தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் மீண்டும் ஏற்படாது இருக்க "அரசாங்கம் தர்மத்தின் வழி செல்லட்டும்" எனும் பிரார்த்தனையை முன் நிறுத்தியே இந்த யாத்திரை ஏற்பாடு செய்யப் பட்டது. யாத்திரையுடன் மாத்தறை சனத்ஜெய சூரிய மைதானத்தில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

இந்த யாத்திரை நேற்று களுத்துறை நோக்கி பயணமாகியும் உள்ளது.

## மிகுந்த சிரமத்தின் மத்தியில் உருவான அரசை வீழ்த்த இடமளிக்கக்கூடாது

### அமைச்சர் அநுரா பண்டார நாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

"மிகச் சிறிய கடிதம் ஒன்றில் கையெழுத்திட சில அதிகாரிகள் 2 இலட்சம் பெறுகின்றனர். அவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும்" என உல்லாசப்பயண முதலீட்டுஅபிவிருத்தி அமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் உருவாக்கி இருக்கும் இந்த அரசை வீழ்த்துவதற்குயாருக்கும் இடமளிக்கக்கூடாது. ஐ.தே.கட்சி அரசு முன்னெடுத்துச் சென்ற விசமத்தனமான ஆட்சியை வீழ்த்தி கட்டியெழுப்பிய ஐ.ம.சு முன்னணியரசு வீழ்ச்சியுற நான் ஒ[illegible]ம் அ[illegible]திக்கமாட்டேன் எனக் கூறியுள்ளார். தற்போது உ[illegible]ம் ஐ.தே. முன்னணி செய்யும் பிரச்சாரங்களினால் தாம் [illegible]பலை அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சு.சே. ஊழியர்களின் போராட்டம் பிரதமருடனான சந்திப்பின் பின் ஒத்திவைப்பு

(கொழும்பு)


தமது தொழிற் சங்கப்போராட்டத்தை ஒத்தி வைப்பதற்கு தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக சுகாதார சேவையின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்தே இந்த முடிவினை அறிவித்துள்ளது. பிரதமருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாட்டினை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனை நிறைவேற்றுவது அவசியம் எனவும் சுகாதார சேவைகளின் தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் ரவிகுமதேஷ் கூறியுள்ளார்.

தற்கால ஊழியர்களின் ஊதிய அதிகரிப்பிற்கு ஒருவார காலத்தினுள் தீர்வு காணுதல், சம்பள முரண்பாட்டை நிவர்த்திசெய்தல், நிர்ணயிக்கப்பட்ட சம்பள உயர்வை 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண சபைகள் அனைத்திலும் அமுலுக்குக் கொண்டு வரச்செய்தல் என்பன தொடர்பாக பிரதமருடன் நடத்திய பேச்சுக்களில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.அத்துடன் பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாட்டிற்கு சம்பள நிர்ணயக்குழு ஊடாக முதல் சுற்றுப்பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுதல் ஆயுர் வேத வைத்தியத்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க கவனம் செலுத்துதல் என்பவற்றிற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. என்று சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

# முன்னாள் உதவியாளருடன் காதலா?

## பத்திரிகைகளுக்கு பெக்காம் எச்சரிக்கை



தனது தனிப்பட்ட வாழ்க்கையில் அவதூறு வெளியிடும் பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் இங்கிலாந்து காற்பந்து அணியின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம். போர்த்துக்கல்லில் நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கோப்பை காற்பந்துப் போட்டியில் போர்த்துக்கல்லிடம் பெனால்டி சூட் அவுட்டில் 5-6 எனத் தோல்வியுற்று வெளியேறியது இங்கிலாந்து. காற்பந்து உலகில் அதிகமான சம்பளத்துக்கு ஆடிவரும் பெக்காம் தனது பெனால்டி வாய்ப்பில் கோல் போடவில்லை. இதையடுத்து கண், காது, மூக்கு வைத்து பத்திரிகைகள் எழுத ஆரம்பித்துவிட்டன. இங்கிலாந்தில் தனது மனைவி குழந்தைகளை விட்டுவிட்டுத் தனது முன்னாள் உதவியாளர் ரெபக்காலூஸ் உடன் பெக்காம் சுற்றித்திரிகிறார் என வெளிவந்த செய்தியால் ஆத்திரமடைந்தார் பெக்காம். அச் செய்தியை மறுத்த அப்பத்திரிகை மீது வழக்குத் தொடரப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். பெக்காமுக்கு பாப் ஸ்ரரான மனைவி விக்டோரியா,புரூக்ளின், ரோமியோ ஆகிய 2 மகன்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் இங்கிலாந்தின் மான்செஸ்டரில் வசித்து வருகின்றனர். ஆனால், பெக்காம் ஸ்பெயினின் மாட்ரிட் அணிக்காக ஆடிவருவதால் அங்கேயே பெரும்பாலான தினங்களை கழிக்க வேண் டியுள்ளது. மான் செஸ்ட்ர் யுனைட் டெட் அணியிலிருந்து மாட்ரிட் அணிக்கு 2003 ஜூலையில் பல கோடிகளுக்கு ஒப்பந்தமானார் பெக்காம் இந்நிலையில் குடும்ப வாழ்க்கையில் அவதூறு வெளியிட்டு தாக்குதல் தொடுத்துள்ள ஊடகங்களுக்கு எச்சரிக்கை விடுத்து அவர் கூறியுள்ளதாவது; எனது தனிப்பட்ட வாழ்க்கையில் அவதூறு வெளியிட்டு தாக்குதல் நடத்துவது மனதுக்கு கஷ்டமாக உள்ளது. எனக்கு 2 குழந்தைகள், மனைவி உள்ளனர். பின்னர் எதற்கு பத்திரிகைகள் மீது கோபம் காட்டுகின்றார் எனக் கேட்கலாம் நான் கோபம் அடையவில்லை.அம் மாதிரியானநிலையை யார் எதிர்நோக்கினாலும் குடும்பத்தில் அது பிரச்சினையைத்தான் ஏற்படுத்தும். இங்கிலாந்தின் டிரா:.போர்டில் மனைவி, குழந்தைகளுடன் எளிதாகச் சுற்றலாம். ஆனால் மாட்ரிட்டில் அவ்வாறு இருக்க முடியாது. ரசிகர்கள் என்னைப் பெரிதும் அடையாளம் கண்டுவைத்துள்ளனர். அதனால் மறைந்துதான் பல இடங்களுக்கு செல்ல முடிகிறது. அதை பத்திரிகைகள் அவதூறாக வெளியிடுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் முகாமையாளர் ஜெராட்டுகோலியே நம்பிக்கையை சிதைக்கும் வகையில் செயற்பட்டார்

## மிலான் பரோஸ்



யூரோ 2004 கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இதுவரை அதிககோல்களைப் பெற்றுள்ள செக்குடியரசின் மிலான் பரோஸ் தாம் முதல்தரப் போட்டிகளில் விளையாடும் இங்கிலாந்தின் லிவர்பூல் கழகத்தின் முன்னாள் முகாமையாளரைச் சாடியுள்ளார்.

தன்னுடைய தன்னம்பிக்கையைச் சிதைக்கும் வகையில் அவர் செயலாற்றியதாகவும் மிலான் பரோஸ் கூறியுள்ளார்.

22 வயதுடைய மிலான் பரோஸ் செக் குடியரசு அணி யூரோ 2004 போட்டிகளில் இதுவரை பங்கேற்ற நான்கு போட்டிகளிலும் கோல்களை அடித்து 5 கோல்களுடன் முன்னிலையில் திகழ்கின்றார்.

டென்மார்க் அணிக்கு எதிராக நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் இவர் அபாரமாக விளையாடி இரண்டு கோல்களை போட்டிருந்தார்.

இங்கிலாந்தின் லிவர்பூல் பிராந்திய கழகத்துக்காக விளையாடும் மிலான் பரோஸ் தமது கழகத்தின் முன்னாள் முகாமையாளர் ஜெராட்கோலியே தனது நம்பிக்கையை சிதைக்கும் வகையில் நடந்து கொண்டதாகக் கூறியுள்ளார்.

கடந்த பருவகாலத்தில் உரிய முறையில் பிரகாசிக்கத் தவறிய போதும் எதிர் வரும் காலத்தில் லிவர்பூல் கழகத்திற்காக திறமையை வெளிப்படுத்தவுள்ளதாக மிலான் பரோஸ் தெரிவித்துள்ளார்.


## சர்வதேச தடகள போட்டி
## ரஷ்ய வீராங்கனை சாதனை

லண்டனில் நடைபெற்ற சர்வதேச தடகளப்போட்டியில் மகளிர் பிரிவில் உயரம் பாய்தலில் ரஷ்ய வீராங்கனை தமது முன்னைய சாதனையை முறியடித்துள்ளார்.

இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் சர்வதேச தடகளப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தடி ஊன்றி உயரம் பாய்தல் போட்டியில் ரஷ்யாவின் எலினாடிம்சி என்ற வீராங்கனை 4.87 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை படைத்தார்.

இவர் உடாபஸ் நகரில் நடைபெற்ற போட்டியில் 4.86 மீற்றர் உயரம் தாண்டி முன்னர் சாதனை படைத்திருந்தார்.இப்போது முன்னைய சாதனையை முறியடித்தார்.

10.000 மீற்றர் ஓட்டப்பந்தையத்தில் பிரிட்டிஸ் வீராங்கனை றானாறாஸ் 30 நிமிடம 17.16 வினாடிகளில் கடந்து சாதனை படைத்தார்.



# இந்திய, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டி இளம் வீரர்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்

## இன்சமாம் உல்-ஹக்

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கெதிரான போட்டிகளில் ஆட தமது அணி பயந்துவிடவில்லை எனவும் அந்த பலம்மிக்க இரு அணிகளுடனும் விளையாடுவது தமது அணியின் இளம் வீரர்களுக்கு ஒரு உற்சாகத்தை அளிக்கும் என்றும் அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஆசிய கிண்ணப் போட்டிகளுக்காகவும் அதன் பின்னர் ஆகஸ்ட் 20ஆம் திகதி இந்தியா, அவுஸ்திரேலிய அணிகளுடன் நெதர்லாந்தில் நடைபெறவுள்ள முக்கோணத் தொடருக்குமான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள போதே உல்-ஹக் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; நாங்கள் எமது மண்ணில் இந்தியாவிடம் தோல்வியடைந்தாலும் அது ஒரு தீவிரமான போட்டியாக இருந்ததென்றும் அதனைத் தொடர்ந்து அணி புதுத்தெம்புடன் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

முன்னைய பயிற்றுவிப்பாளர் ஜாவிட் மியன்டாட்டின் பதவிக் காலம முடிவுற்ற நிலையில் புதிய பயிற்று விப்பாளராக முன்னாள் இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர் பொப் வூல்மர் நாளை மறுதினம் பாகிஸ்தான் வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவரின் பயிற்சியின் பின்பு தமது அணியின் இளம் வீரர்கள் திறமையாக விளையாடுவர் என்றும் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்துள்ளார்.


# அவுஸ்.க்கு எதிரான டெஸ்ட்போட்டி சிறிலங்கா அணியில் லசித் மாலிங்க

அண்மையில் வட அவுஸ்திரேலியாவின் முதலமைச்சர் அணியுடனான பயிற்சி ஆட்டத்தின்போது திறமையாகப் பந்து வீசிய சிறிலங்கா கிரிக்கெட் பயிற்சி அணியின் வீரர் லசித்மாலிங்க நாளை அவுஸ்திரேலிய கிரிக்கெட் பயிற்சி அணியின் வீரர் லசித் மாலிங்க நாளை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடனான போட்டியில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருப்பதாக அணித்தலைவர் மாவன் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இருபது வயதுடைய வேகப்பந்து வீச்சாளரான மாலிங்க நடந்து முடிந்த பயிற்சிப் போட்டியில் முதலாவது இனிங்சில் 90 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

எட்டு வருடங்களின் பின்னர் சிறிலங்கா அணி அங்கு டெஸ்ட் போட்டியில் கலந்துகொள்ளச் செல்வதுடன் அத்தபத்துவுக்கு இதுவே முதலாவது போட்டியாகும்.

# விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ்போட்டி; முன்னணி வீரர்கள் கால் இறுதிக்குத் தகுதி



கெவிட்

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் பகிரங்க டெனிஸ்போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் காலிறுதிப் போட்டிகளில் விளையாட ரோஜர் பெரடர், கின்கென்மன், லெயிட்டன் கெவிட் அன்டி ரொடிக் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

உலகத் தரப்படுத்தலில் ஆண்கள் பிரிவில் முதலிடம் வகிக்கும் சுவிஸ்சர்லாந்து வீரர் ரோஜர்பெரடர் நான்காம் சுற்றுப் போட்டியில் குரோசியவீரர் இர்றோகர்ரோவிசசை 6-5, 7-6 ,7-6 என்ற நேர் செற்றில் தோற்கடித்தார். இதன் மூலம் காலிறுதியில் அவுஸ் வீரர் லெயிட்டன் கெவிட்டை எதிர்த்தாடவுள்ளார்.

இதேவேளை விம்பிள்டன் போட்டிகளில் நான்கு முறை அரையிறுதிக்குத் தகுதிபெற்ற கின்கென்மன் காலிறுதிக்கு தகுதிபெற்றதன் மூலம் கடந்த 68 ஆண்டு காலத்தில் விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றக்கூடிய பிரித்தானிய வீரர் என்ற நம்பிக்கையை தக்க வைத்துள்ளார்.

மகளிர் ஒற்றையர் போட்டியின் காலிறுதிக்கு குரோசியாவின் கரோலினாபிறைஸ் தகுதி பெற்றார்.

ஏற்கனவே சம்பியன் வீனஸ் வில்லியத்தை வீழ்த்திய இவர் மற்றலீன் மரினாவை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார். இதனை விட லிம்சே டெவன் போட், மரியா சரகோவா ஆகியோரும் காலிறுதியில் தகுதிபெற்றனர்.

# சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி ரிக்கிபொண்டிங் விளையாடுவது சந்தேகம்



அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் விளையாடுவது சந்தேகம் என




அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டிக்காக அவுஸ்திரேலியாவின் வட பிராந்திய நகரான டாவினில் அணிவீரர்களுடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ரிக்கிபொண்டிங் உறவினர் ஒருவரின் சுகயீனத்தை அடுத்து தஸ்பேனியாவுக்குச் சென்றார்.

எனினும் உறவினர் உயிரிழந்ததை அடுத்து நாளை சிறிலங்கா அணிக்கு எதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டியில் விளையாட முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

ரிக்கி பொண்டிங்கிற்குப் பதிலாக உபதலைவர் அடம்கில் கிறிஸ்ட் தலைமை தாங்கவுள்ளார்.

ரிக்கி பொண்டிங் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சிறிலங்கா அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி யூலை மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்க அணியில் மார்ட்டினா



செரீனா வில்லியம்ஸ்,வீனஸ் வில்லியம்ஸ் ஜெனிபர் காப்ரியாட்டி,சந்தா ரூபின் ஆகியோர் ஒலிம்பிக்போட்டிக்கான அமெரிக்க டென்னிஸ் குழுவில் இடம்பெற்றுள்ளனர் என்றால் ஆச்சரியப்படுவதற்கு ஏதும் இல்லை! ஆனால் 47 வயதாகும் முன்னால் ஜாம்பவான் மார்ட்டினா நவரத்தினலோவாவும் அக்குழுவில் இடம் பெற்றுள்ளார் என்றால் சற்று வியப்பாகத்தான் இருக்கும். அவர் லிசாதேரமாண்டுடன் இணைந்து இரட்டையர் போட்டியில் விளையாட உள்ளார். அதே சமயம் ஆடவர் பிரிவில் யு.எஸ்.ஓபன் சம்பியன் ஆன்டிராடிக் ஒற்றையர் பிரிவில் மட்டுமல்லாது, இரட்டையர் பிரிவிலும் பங்கேற்கிறார். மார்டி பிஷ் அவருடன் இரட்டையர் போட்டியில் பங்கேற்கிறார். உலகில் முதலிடத்தில் உள்ள இரட்டையர்களான பாப், மைக் பிரையன் ஆகியோரும் அமெரிக்க அணியில் இடம்பெற்றுள்ளனர். வின்ஸ் ஸ்பேடியா,டெய்லர் டென்ட் ஆகியோரும் அமெரிக்க ஒற்றையர் அணியில் இடம்பிடித்துள்ளனர். 2000 சிட்னி ஒலிம்பிக் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் ஒற்றையர் பிரிவுக்கான தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது நினைவு கூறத்தக்கது.

## பூபதி ஜோடி தோல்வி

விம்பிள்டன் டென்னிஸில் பயஸ், பூபதிஜோடிகளின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. திங்கட்கிழமை நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மகேஷ் பூபதி, பெலாரஸின் மாக்ஸ் மிர்ன்யி ஜோடி 4-6, 6-3, 6-8 என்ற செட்களில் கலியன் கௌலப் (ஆஸ்திரேலியா), நெனாட் ஜிமோன் ஜிக் (செர்பியா) ஜோடியிடம் போராடித் தோல்வியுற்றது. முன்னதாக ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற -2ஆவது சுற்றில் பூபதி, மிர்ன்யி ஜோடி 7-5,6-3 என்ற நேர் செட்களில் நெதர்லாந்தின் ரேமோன் ஸ்லூடர், மார்ட்டின் வெர்கெர்க் இணையைத் தோற்கடித்து முன்னேறியிருந்தது. அதேசமயம் லியாண்டர்பயஸ் செக் குடியரசின் டேவிட் 6-7(6-8), 3-6 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் டிராவிஸ்பேரட், வின்சென்ட் (ஸ்பேடியா) இணையிடம் 3வது சுற்று வாய்ப்பை இழந்தது.



## சிந்தனைக்கு

நாம் துணிந்து போராடுவோம் சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கின்றது; வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 30-06-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com

## நம்பிக்கை ஏற்படவாய்ப்பில்லை

கருணாவிற்கு இராணுவம் பாதுகாப்பு வழங்குவதுடன் அரசாங்கம் அவரைப் பயன்படுத்தி தற்போதைய சூழ்நிலையைக் கெடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் அரசாங்கத்தினுடைய சமாதான முன்னெடுப்புகள் நம்பகமின்மையைப் புலிகள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருடனான சந்திப்பின் போது இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

" கருணாவை இராணுவம் பாதுகாத்துக்கொண்டும் அரசாங்கம் அவரை பயன்படுத்திக் கொண்டும் இருக்கும் வரை அவர்கள் சமாதான முன்னெடுப்புகளில் ஒரு நம்பகத் தன்மையோடு நடப்பதாக இல்லை" என இச்சந்திப்பின் போது வலியுறுத்தியுள்ளதாக அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப 'தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளமை இதனை வெளிப்படுத்துகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேற்கொண்டு வரும் சமாதான முன்னெடுப்புகள் குறித்து மக்களுக்கு பல ஐயப்பாடுகள் உள்ளன. முதலாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய பங்காளியாக ஜே.வி.பி உள்ளமை. சமாதான முன்னெடுப்புகளுக்கு முற்றிலும் விரோதமான கருத்தைக் கொண்ட ஜே.வி.பியின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எவ்வாறு சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்ளப்போகிறார்? என்ற கேள்வியை தமிழ் மக்கள் மட்டுமல்ல சர்வதேசமும் எழுப்புகின்றது.

அடுத்ததாக ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கத்தை அமைத்துள்ள போதும் இன்று வரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்றத்தில் இதுவரை தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவில்லை இதற்காக இன்னமும் அது சிறிய கட்சிகளின் தயவை நாடி நிற்கிறது.

அதிலும் குறிப்பாக ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவை சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடி நிற்கிறது. ஜாதிக ஹெல உறுமய கொண்டுள்ள பாராளுமன்ற ஆசனங்கள் அதற்குக் கிடைப்பின் பெரும்பான்மையை நிரூபித்து விடுவது சுலபம் என நினைக்கிறது. இதற்காக பிக்குகள் தாக்கப்பட்டதற்கு அக்கட்சி மன்னிப்பும் கோரியிருக்கிறது.

அவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவையும் இணைத்துக் கொண்டு பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் பெறுமானால் சமாதான முன்னெடுப்புகளுக்கு அது மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை.

அடுத்ததாக தமிழ் மக்கள் சிறிதும் விரும்பாத தேச விரோதிகள் எனப் புறக்கணிக்கப்பட்டோரை அரசாங்கம் அரவணைத்து வைத்திருப்பது மக்களுக்கு அரசின் சமாதான முன்னெடுப்புகள் குறித்த சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது.

இதிலே ஈ.பி.டி.பி குழுச்செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சரவையிலேயே சந்திரிகா அரசாங்கம் வைத்திருக்கிறது. இப்பொழுது கருணாவையும் அரசாங்கம் இணைத்துகொண்டுள்ளது.

கருணாவை சந்திரிகா அரசாங்கம் மறைத்து வைத்துக் கொண்டு இரகசியத் தொடர்வை வைத்துக் கொண்டிருந்தாலும் அமைச்சரவை உறுப்பினரான டக்ளஸ் தேவானந்தா கருணாவுடன் தான் வைத்திருக்கும் தொடர்வைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருக்கிறார். இதன்மூலம் தேசவிரோதச் சக்திகள் ஒன்றினைவதற்கு அரசாங்கம் துணை புரிந்திருக்கிறது என்பது வெளிப்படுகிறது.

தமிழ்மக்களின் அபிலாசைகளுக்கு எதிரான இவர்களை அரவணைத்து அரசாங்கம் வைத்திருப்பதானது நிச்சயமாக தமிழ் மக்கள் மத்தியிலே அது குறித்து நம்பிக்கையை வளர்க்க உதவாது. இப்பொழுது கருணாவை சந்திரிகா அரசாங்கம் பயன்படுத்தும் விதமானது இன்றுள்ள சூழலை மிக மோசமாகக் கெடுக்கும் வகையில் இருக்கின்றது.அதாவது கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக சமாதான முன்னெடுப்புகள் மந்த நிலையை அடைந்துள்ளபோதும் அமைதிச் சூழல் பேணப்பட்டே வருகின்றது. மக்கள் எதிர் பார்த்த அளவு இயல்பு வாழ்கைகிட்டாவிட்டாலும் சமாதான முன்னெடுப்புகளுக்கான களநிலை நிலவிவந்தது. ஆனால் கருணாவைப் பயன்படுத்தி அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதனையும் இல்லாதொழிக்கும் நிலைக்கே சென்று கொண்டிருக்கிறது.

இப்பொழுது கருணாவின் பெயரால் மட்டு. அம்பாறை மாவட்டத்தில் தோற்றுவிக்கப்படும் பதற்றநிலை குறித்து அரசாங்கத்தைத் தவிர அனைத்துத் தரப்பினருமே கவலை கொண்டவர்களாக உள்ளனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இங்கு தோன்றியுள்ள சிக்கல் நிலைகுறித்து தனது கருத்தை வெளியிட்டுள்ளது.

ஆனால் மட்டு. அம்பாறை மாவட்டங்களின் இப்பதற்ற நிலையை மேலும் அதிகரிக்க விரும்பும் செயற்பாடுகளிலேயே இராணுவமும்அரசாங்கமும் ஈடுபட்டுவருகின்றன.

இப்போக்கிலிருந்து இவ்விருதரப்பும் மாறும்வரை அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புகளில் நம்பிக்கை கொள்வது எவ்வாறு? என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வர முன்னரே அதன் மீது அவநம்பிக்கை கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் அவநம்பிக்கையை ஏற்படுத்தவே இச்செயற்பாடுகள் உதவும்.

# பௌத்தர்கள் பௌத்தம் பற்றிப்பேசினால் இந்நாட்டில் அதனை இனவாதம் என்கின்றனர்

## -ஜாதிக ஹெல உறுமய கவலை

(கொழும்பு)

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்குப் பாதகமான அம்சங்கள் இருக்குமாயின் அந்த வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கப்போவதாக ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமய மாத்தறையில் கூட்டம் ஒன்றை நடத்தியது. இதன் போது கருத்துரைத்த ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரும் சிறப்பான திட்டங்களுக்கு' தமது கட்சி ஆதரவளிக்கும் எனக் குறிப்பிட்டனர். இலங்கையில் பௌத்தர்கள் பௌத்தம் குறித்துப் பேசினால் அதனை இனவாதம் எனக் கூறும் அளவிற்குச் சிங்கள இனம் அடிமைப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (32)

# ரவிகருணாநாயக்க முன் பிணைமனு தீர்ப்பு அடுத்த வாரத்திற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முறைகேடான நிதி கையாள்கை தொடர்பிலான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள தம்மை கைது செய்ததற்கு எதிராக முன் பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் எனக் கோரி முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தாக்கல் செய்த மனுவின் தீர்ப்பு எதிர்வரும் செவ்வாய்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நேற்று இந்த மனு விசாரணைக்கு அழைக்கப்பட்ட வேளை நீதிமன்றத்தில் திறந்த நிலையில் கருத்துரைத்த நீதவான் சரத் கருணாரட்ன, ரவிகருணாநாயக்க கைது செய்யப்படும் விடயம் தொடர்பில் சிறிலங்கா காவல்துறை சிரேஸ்ட அதிகாரி வெத்தசிங்க நடந்து கொண்ட விதம் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்தார். காவல்துறையினர் ரவி கருணாநாயக்கவை கைது செய்யும் விடயத்தை ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி. எல் பீரிஸ், மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோர் நீதவானின் அறைக்கு சென்று தம்மை சந்தித்தனரா?என காவல்துறை அதிகாரியான வெத்தசிங்க, நீதிமன்ற காவல்துறை அதிகாரியிடம் வினவியுள்ளார்.இது முழுமையாக நீதித்துறையை பாதிக்கும் செயற்பாடாகும் என கூறிய நீதிவான்,சம்பவம் சம்பந்தமாக காவல்துறை ஆணைக்குழு மற்றும் காவல்துறை மாஅதிபர் ஆகியோர் விசாரணைகளை நடத்த வேண்டும் என உத்தரவிட்டார். இந்த நிலையில் மனுதாரரான ரவி கருணாநாயக்கவின் சார்பில் ஆஜரான சனாதிபதி சட்டத்தரணி கே.என். சொக்சி, அரசியமைப்பின்படி தமது கட்சிக்காரருக்கு முன் பிணை வழங்க முடியும் என தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் சட்டமா அதிபரின் சார்பில் கருத்தை முன்வைத்த அரச சட்டத்தரணி வசந்த நவரட்ண பண்டார மனுதாரரர் கோரியுள்ள முன்பிணை உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்க முடியாது எனத் தெரிவித்தார்

நாட்டில் சாதாரண பிரஜை தொடர்பில் கடைபிடிக்கப்படும் நீதி ரவிகருணாநாயக்க விடயத்திலும் கடைபிடிக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். மனுதாரர், தம்மை கைது செய்வதைத் தடுக்கும் வகையில் முன்பிணையை பெற முயல்வது சட்டத்தில் இருந்து தப்ப முயலும் செயலாகும் எனவும் தெரிவித்தார். இந்த நிலையில் ரவி கருணாநாயக்கவின் மனுவின் மீதான தீர்ப்பை தாம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழங்குவதாக நீதவான் அறிவித்து வழக்கை ஒத்தி வைத்தார். (32)

# தமிழ்ச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவின் வருடாந்த தமிழ் கல்வி சஞ்சிகைக்கு பாடசாலை மட்டத்தில் இருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுவதாக கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவு அறிவித்துள்ளது. கடந்த வருடம் முதல் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவினால் கூர்மதி என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுகிறது. இதில் இந்த முறை தமது ஆக்கங்களை இடம்பெற செய்ய விரும்பும் பாடசாலை மாணவர்கள் அதிபரின் ஊடாக தமது ஆக்கங்களை அனுப்பிவைக்கலாம். பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இருந்தும் இந்த சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்கள் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், கல்வி, இசை,நடனம்,நாடகம் மற்றும் பயனுள்ள கல்வி துறை சார்ந்த தகவல்கள் போன்றவற்றை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும் என கல்வி அமைச்சின் தமிழ் மொழிக் கல்வி பணிப்பாளர் என். நடராஜா அறிவித்துள்ளார்.ஆக்கங்கள் கல்விப்பணிப்பாளர்,தமிழ் மொழிப்பிரிவு ,கல்வி அமைச்சு,இசுருபாய.பத்தரமுல்ல என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜுலை 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.


# கனடாவில் மீண்டும் லிபரல் ஆட்சி புதிய மக்களாட்சிக் கட்சியுடன் கூட்டு

பரப்பளவில் உலகில் இரண்டாவது பெரிய நாடான கனடாவின் 34ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இத்தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டபோது 168 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பெரும்பான்மை கட்சியாக பாராளுமன்றத்தில் ஆட்சிபுரிந்த லிபரல் கட்சி, தனது பெருன்பான்மைப் பலத்தைத் இழந்துள்ளது. இருந்த போதிலும் 135 ஆசனங்களுடன் சிறுபான்மை அரசமைக்கும் வெற்றியை லிபரல்கட்சி பெற்றுள்ளது. 308 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காக நடைபெற்ற தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் இறுதிப் பகிர்வுகள் இவ்வாறு அமைந்திருந்தன. லிபரல் கட்சி 135 - 36.8 சதவீதமான ஆதரவு வாக்குக்கள், பழமைவாதக் கட்சி 93 - 29.6 சதவீதமான ஆதரவு வாக்குக்கள், பாட்டி கியூபெக்குவா 55 - 12.5 சதவீதமான ஆதரவு வாக்குக்கள், புதிய மக்களாட்சிக் கட்சி 24 - 15.6 சதவீதமான ஆதரவு வாக்குக்கள், சுயேட்சை 1 இந்நிலையில் புதிய மக்களாட்சிக் கட்சியுடன் இணைந்து லிபரல் கட்சி ஆட்சி அமைக்கும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ் மக்கள் நிறைந்து வாழும் ஒன்ராரியோ மாகாணத்தின் மேற்கு டொன்வலி தொகுதியில் புதிய மக்களாட்சிக் கட்சி சார்பில் டேவிட் தோமஸ் என்ற ஈழத் தமிழர் முதற்தடவையாக போட்டியிட்ட போதிலும் அவர் பாராளுமன்றத் திற்கு தெரிவாகத் தவறியுள்ளார். பல்லினச் சமூகங்கள் மிக அதிகமாக வாழும் கனடிய மண்ணில், நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தல் மிகவும் அதிகமாக புலம்பெயர் வாழ் மக்களின் கவனத்தை ஈர்த்திருந்தது. இதற்கான காரணம் குடிவரவாளர்கள் பெருமளவில் வருடாவருடம் வந்தடையும் கனடாவில், குடிவரவாளர்களின் வருகையையும், வசதிகளையும் கட்டுப்படுத்தக் கங்கணம் கட்டிநின்ற பழமைவாதக் கட்சி (கன்சவ் வேர்ட்டிவ் கட்சி) வெற்றி பெறக் கூடிய வாய்ப்பொன்றை உருவாக்கியிருந்ததே. மிகவும் பலமான அணியாக, அமோக வெற்றி வாய்ப்பை எதிர்பார்த்து தேர்தல் அறிவிப்பை விடுத்த ஆளும் கட்சியின் தலைவரும், கனடிய பிரதம மந்திரியுமான போல் மார்ட்டீன், தேர்தல் அறிவித்தலை விடுத்த ஒரு சில நாட்களிலேயே பலத்த குற்றச்சாட்டுக்களில் சிக்கிக் கொண்டு, லிபரல் கட்சியின் செல்வாக்கு மடுவுக்குள் சரிவதைக் கண்டும் எதுவும் செய்யமுடியாது திண்டாடினார். கன்சவ்வேட்டிவ் கட்சியின் செல்வாக்கு உயர ஆரம்பித்தது. கன்சவ்வேட்டிவ் கட்சி ஆட்சியமைக்க வாய்ப்பாகி விடலாம் என்பதால், பல நாடுகளிலும் இருந்து வந்து குடியேறிய புலம்பெயர் மக்கள் தங்களது ஆதரவை முழுமையாக வழங்கியதன் மூலம் லிபரல் கட்சியின் தோல்வியை இறுதி நேரத்தில் தவிர்க்க உதவியுள்ளார்கள். பல்லினத்தவர்கள் மிக அதிகமாக வாழும் ஒன்ராரியோவிலேயே லிபரல் கட்சி பெரும்பான்மையான ஆசனங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. பல்லின சமூகத்திற்கு மிக அதிகமான நன்மைகளைப் பெற்றுத் தருவதற்கு உறுதி வழங்கிய புதிய சனநாயகக் கட்சியுடன் ஏற்கனவே பல்லின மக்களின் செல்வாக்கைப் பெற்ற ஆளும் லிபரல் கட்சி கூட்டணி அமைப்பதன் மூலம், குடிவரவாளர்களுக்கான அழுத்தங்களும், சிரமங்களும் அதிகரிக்க வாய்ப்பில்லை என எதிர்பார்க்கப்படுகிறது.

## லெப். கேணல் கங்கை அமரன் நினைவு மண்டப திறப்பு விழாவில்...







### தமிழீழக் காவல்துறையால்

# கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு வீதி ஒழுங்கு குறித்த கருத்தூட்டல்

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ காவல்துறையினரால் தமிழீழக் கல்விக்கழக அனுசரணை யுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர் களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தூட்டல் செயலமர்வு நேற்றுக் காலை 9.15 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையில் ஆரம் பித்துவைக்கப்பட்டது. இந்நிகழ் வில் பொதுச்சுடரினை குற்றத் தடுப்பு பிரிவுப்பொறுப்பாளர் பா.இய லரசன், மாணவர் ஆபிவிருத்தி வலயக்கல்விப் பணிமனை பிரதிக் கல்விப்பணிப்பபாளர் க.சிவசாமி ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ காவல்துறை நடுவப்பணியக கண் காணிப்பாளர் சி.மாதவன் ஏற்றி வைத்தார். இந்நிகழ்வு வலயக் கல்விப் பணிமனை பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சின்னராசா தலைமை யில் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்புரையினை நடுவப்பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன் வழங்கினார். இதனைத் தொடர்ந்து கருத்தூட்டல் செயலமர்வு வாகனப் போக்குவரத்துப் பிரிவுக் கண் காணிப்பாளர் மு.கனகலிங்கம் ஆரம்பித்துவைத்தார். இக்கருத் தூட்டல் செயலமர்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை களில் இருந்து பெரும் எண்ணிக் கையான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இன்றும் மேற்படி பாடசாலை ஆசிரியர்களுக்கான இரண்டாம் நாள் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தூட்டல் செயல மர்வு இடம் பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (சோ)

### படகு...

கோட்ட அரசியல் துறைப்பொறுப் பாளர் அன்பழகன் தலைமையில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற் றது. வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச செயலாளர் சூரியமூர்த்தி, கடற்புலிகளின் வட மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி. கல்யாணி, வல்லை. இந்து மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி நகுலாம்பிகை ஆகியோரது வீர வணக்க உரைகள் இடம் பெற்றன.

கடற்கரும்புலி மேஜர் கதிர் ஓவியனின் திருவுருவப்படம் மத்த ரோடை சனசமூக நிலையத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப் பட்டு கோப்பாய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழவன் தலைமையில் வீரவணக்கக்கூட்டம் இடம்பெற்றது.

கடற்புலிகளின் மாவீரர் பணி மனைப் பொறுப்பாளர் சுதர்சன் வீரவணக்க உரையாற்றினார்.

கடற்கரும்புலி லெப்கேணல் யாழினி யின் திருவுருவப்படம் மக்கள் வணக்கத்திற்காக சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டு வலிமேற்குப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செய லாளர் கைலாயநாதன் தலைமை யில் வீர வணக்கக்கூட்டம் இடம் பெற்றது.

வீர வணக்க உரைகளை கடற் புலிகளின் அரசியல் துறைப்பொறுப் பாளர். செல்வி பூரணி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர் ஒன்றியத் தலைவர் திவ்விய ராஜ், தேசிய எழுச்சிப் பேரவைப் பிரதிநிதி த.கதிர்காமநாதன் ஆகி யோர் நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து இந்நான்கு மாவீரர் களதும் திருவுருவப் படங்கள் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத் திற்கு ஊர்வலமாக எடுத்துவரப் பட்டு மாவீரர்களின் பெற்றோரால் நினைவுக்கற்கள் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன.

### லெப்...

தளபதி பகலவன் ஏற்றிவைத்தார்.

அடுத்து கங்கை அமரன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு கங்கை அமரனின் துணைவியார் சீமா சுடர் ஏற்றி, மலர்மாலை அணி வித்தார். தொடர்ந்து அதே சம்பவத் தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் தசாதரனின் திருவுருவப் படத்திற்கு கடற்புலிகளின் தளபதி லக்ஷ்மன் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். அடுத்து மண்டபத் தின் பெயர்ப்பலகையை கங்கை அமரனின் தாயார் திரைநீக்கம் செய்து வைத்தார் மண்டபத்தை கங்கை அமரனின் போராட்ட கால நண் பனும் படை அறிவியல் கல்லூ ரியைச் சேர்ந்தவருமான போராளி பிருந்தன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்து மண்டபத்தி னுள் வைக்கப்பட்டிருந்த மாவீரர் களின் திருவுருவப்படத்திற்கு தளபதி கள், போராளிகள், பொதுமக்கள் என பெருமளவானோர் அஞ்சலி செலுத்தினர்.

இவற்றைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின. கடற் புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் தலைமையில் ஆரம்ப மான இந்நிகழ்வில் நினைவுரையை பிருந்தன், கடற்புலிகளின் நளாயினி படைப்பிரிவுப் போராளிகள் ஆற் றினர். சிறப்புரையை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார்.

நிகழ்வின் இறுதியில் மேற்படி மாவீரர்கள் நினைவாக கடந்த இரண்டாண்டுகளாக கிராஞ்சி, வேரவில் பகுதி மக்கள், கடற்புலிப் போராளிகள் ஆகியோரிடையே நடத்தப்பட்ட கடல் நீச்சல், கடல் அஞ்சல், கிறிஸ் கம்பம் ஏறல் உள் ளிட்ட பல்வேறு விளையாட்டுக் களில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் களை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை வழங்கி கௌரவித்தார்.

இதேவேளை மைதானத்தின் நாற்றிசையிலும் இருந்து பட் டாசுகள் வெடிக்கவைக்கப்பட்டன.

தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.(லோ,தீ)

### கருணா...

செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் சிறிலங்கா இராணு வப் புலனாய்வுப்பிரிவினருடனும், சிறிலங்காப் படைத்தரப்பினருடனும் இணைந்து கருணாவின் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

### சமூக...

சமூகவிரோத நடவடிக்கைகளிலும், ஈடுபடுவோர் மன்னிக்க முடியாத வர்கள். மனித அறிவிற்கும் தமிழ் பண்பிற்கும் மாறாகச் செயல்படும் ஒவ்வொரு செயல்களும் சமூக விரோதமாகும். - குழுக்களாக திரி வது, சண்டையிடுவது போதைப் பொருள் பாவனை - பெண்க ளுடன் தகாத முறையில் நடந்து கொள்வது பாலியல் பலாக்காரம் விபச்சாரம் - தீய நாட்டங்களில் ஈடுபடுபவர்கள் குறிப்பிட்ட வயதுக் குற்பட்டோர் மது அருந்துதல் புகைத்தல் - வீதிகளில் நின்று நகை யாடுதல் மக்களுக்கு இடையூறு விளைவித்தல் - களவு, கொள்ளை, பொருள் பறித்தல் போன்றவற்றில் ஈடுபடுவோர் ஆகியோர் சமூக விரோதிகளாகக் கருதப்படுவர். எனவே தேசத்தின் விடுதலைக்காக சமூக விரோதிகளை அழிக்க நாம் ஒரு போதும் தயங்கமாட்டோம். தேசத்தின் துரோகிகளாகவும் சமூகத்தின் விரோதிகளாகவும் திகழ்ந்து விலை மதிப்பற்ற உங்கள் உயிர்களை வீணாக்கிக் கொள்ளா தீர்கள். உங்கள் வாழ்வு, எதிர்காலம் பற்றி உங்கள் அறிவு நல்லதொரு முடிவு எடுக்காவிட்டால் எங்கள் ஆயுதங்கள் நிலையானதொரு முடிவை எடுக்கும் என்று விஷேட படைப் பிரிவு பண்டார வன்னியன் படை என்று வவுனியாவில் வெளி யிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. துப் பாக்கி, ரவைகள், கைக்குண்டு போன்றவற்றின் படங்களும் போடப்பட்டு அந்த துண்டு பிரசுரம் சிவப்பு மையினால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

## கிளி. குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் குளத்தில் மூழ்கி மரணம்

(அலுவலக செய்தியாளர்)

நேற்றுக்காலை கிளிநொச்சிக் குளத்திலிருந்து குடும்பஸ்தர் ஒரு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் 2.00 மணியளவில் கிளிநொச்சிக் குளத்தில் மீ பிடிப்பதற்காகச் சென்ற இவர் மாலை 5மணிக்கு திரும்புவதாக கூ விட்டே சென்றிருக்கிறார். ஆனால் 5மணியாகியும் வீடுதிரும்பா தனால் உறவினர்கள் இவரை அப்பகுதியில் தேடிய பின் காவ துறையினரிடம் முறையிட்டுள்ளனர். பின்னர் நேற்றுக்காலை குடும் தினரும் தமிழீழ காவல்துறையினரும் தேடுதலை மேற்கொண்டபோ இரணைமடுவிலிருந்து கிளிநொச்சிக் குளத்திற்கு நீர்வந்துசேரு இடத்தின் நடுப்பகுதியில் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. பின் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதியா செல்வி.சாதனா அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட தமிழீழ காவல்துறையின விசாரணைகளை மேற்கொண்டனர். சாவடைந்தவர் இலக்க இரத்தினபுரம் கிளிநொச்சியை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் யான செங்கோல் மரியான் பெனடிற் (பவுல்) (வயது40) எ ஆவர். இவருக்கு வலிப்பு நோய் இருந்ததாகவும் மீன்பிடித்துக் டிருந்தவேளை வலிப்பு நோய்ஏற்பட்டே நீரில் மூழ்கி இறந்தத விசாரணையின் போது உறுதி செய்யப்பட்ட தாகவும் த காவல்துறையினர் தெரிவித்தனர். (ச)

## தொடரூந்து ஊழியர் மரண 12 சேவைகள் செயலிழந்தன

சிறிலங்காவில் தொடரூந்து சேவை கள் நேற்று முன்தினமும் நேற்றும் இயல்பை இழந்துள்ளன. நேற்று முன்தினம் தொடரூந்து சேவையின் ஊழியர் ஒருவர் மரணமானதை அடுத்து அவரின் மரணச் சடங் கிற்கு பெருமளவான தொடரூ ஊழியர்கள் சென்று விட்டமைய சுமார் 12 தொடரூந்து சேவைக இடம்பெறவில்லை. அதேநே நேற்றும் ஊழியர்கள் பணிகளுச் உரிய நேரத்தில் சமூகமளிக்கா யால் சேவையில் பாரிய பாதி ஏற்பட்டது. (32

### இ.த....

இந்நிலையில் தற்போது அவரது அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக சனாதிபதி சந்திரிகா இந்நிலைப்பாட்டிற்கு வந்திருக்கலாம் என நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

நோர்வே சிறப்புத்தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் இன்று வன் னிக்கு வருகைதந்து விடுதலைப் புலிகளைச் சந்திக்கவுள்ளமை தெரிந்ததே.

### சபாநாயகர்...

கள் அதற்கு முன்னர் பாராளுமன் அமர்வு கூட்டப்பட வேண்டும் எ கோரியுள்ளன. .கடந்த ஏப்ரல் ஆம் திகதி பொதுத்தேர்தல் நட தப்பட்ட பின்னர் 4 தடவைகள் பாரா மன்ற அமர்வு நடத்தப்பட்ட போது அவை யாவும் குழப்ப நிலையா இடையில் நிறுத்தப்பட்டமை தெரி ததே.. (3

## சாவு அறிவித்தல்



சின்னத்தம்பி நவரத்தினம்

யாழ்ப்பாணத்தைப் பிறப் பிடமாகவும், திருநகர் கிளி நொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் 29-06-2004 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும்,நிர்மலா, நித்தியராசா (பிரான்ஸ்), அருள்ராசா, அற்புத ராசா, மரியராணி, மேரி ஜெய ராணி, ஞானசேகர், ராஜ் மோகன், தேவராஜா (பிரான்ஸ்), யுவராணி, யுவராஜ் (தமிழீழப் பாடகர்) ஜெயராஜ் (இள வேனில் வாணிபம், கிளி நொச்சி), காலஞ்சென்ற வசந்த ராஜா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருநகர் இல்லத்தில் நடைபெற்று இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கிளி. புனித திரேசாள் ஆலயத்தில் இறுதி ஆராதனையின் பின் கிளி/திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(4620)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.